விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 26 திங்கட்கிழமை (12.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 358

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அத்தியாவசிய பொருட்களின் விலை அடுத்த மாதம் உயரும்!

## மாற்றுவழி இல்லை என்கின்றனர் வர்த்தகர்கள்

(கொழும்பு) அத்தியாவசிய பொருட்களின் விலை அடுத்த மாதம் அதிகரிக்கும் என கொழும்பு வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். ரூபாயின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நத்தார் மற்றும் புதுவருட காலத்தில் வரவு செலவுத் திட்டத்திற்கு முந்தைய விலை நீடித்திருக்கும்.

ஆனால் இப் பொருட்களை வாங்குவதற்கு புதிய கட்டளைகள் கொடுக்கப்படும்போது விலை அதிகரிப்பு ஏற்படும்.


விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாத ஒரு பொருளாக பால்மா இருக்கும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. இதுவரை பால்மா விலை அதிகரிப்பை நுகர்வோர் அதிகாரசபை தடுத்துவந்தது.

எனினும் உயர்ந்த விலைக்கு பால்மாவை இறக்குமதி செய்து இப்போதைய விலைக்கு விற்பனை செய்வது சாத்தியம் இல்லை என முன்னிலை இறக்குமதியாளர் ஒருவர் தெரிவித்தார்.

மருந்து பொருட்கள் இறக்குமதியாளர்களும் இதேபோன்ற பிரச்சினையை எதிர்நோக்குவதாக கொழும்பு சோனகத்தெரு வர்த்தகர் சங்கத் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புச் சொல்ல வேண்டும்

### சோமவன்ச வேண்டுகோள்



(கொழும்பு)

மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கமே பொறுப்புச் சொல்லவேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், சித்திரவதைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்படாது என்பதனை உறுதி செய்தல், சட்டவிரோத கைதுகள், கருத்துச் சுதந்திர உரிமை போன்ற அடிப்படை மனித உரிமைகள் இலங்கையில் கடுமையாக மீறப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல், சமஉரிமைகளை வழங்குதல் மற்றும் சம சந்தர்ப்பங்களை வழங்குதல் (20ஆம் பக்கம் பார்க்க)



புனர்வாழ்வு அளிக்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள்...

## இலங்கை நிலைவரம் குறித்து அமெரிக்கா புதுடில்லியில் பேசும்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயம் செய்கின்ற அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இலங்கை குறித்த விவகாரங்களை கையாளும், அமெரிக்க உதவி இராஜாங்கத் செயலாளர் வில்லியம் பேர்ன்ஸ் புதுடில்லியில் இலங்கை விவகாரம் குறித்த பேச்சுவார்த்தை நடத்தலாம் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்விஜயத்தின்போது இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான அரசியல் நிலைமைகள் மற்றும் துணைக் கண்டத்தின் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்த வில்லியம் பேர்ன்ஸ் புதுடில்லியில் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக இவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

புதுடில்லிக்கு நேற்று சென்ற இவர் நாளை 13-ம் திகதி வரை அங்கு தங்கியிருந்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மத்தாய் ஆகியோருடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை விவகாரம் தொடர்பாக வில்லியம் பேர்ன்ஸ் புதுடில்லியில் கலந்துரையாடுவாரா என்பதை உறுதிப்படுத்த இந்தியாவுக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதனிடையில் இந்து சமுத்திர பிராந்தியத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்திய தரப்புடன் (20ஆம் பக்கம் பார்க்க)

**வாழ்த்துகிறோம்**

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவச் செல்வங்களும் சித்தியடைய வாழ்த்துகிறோம்.

கல்விப் பகுதி
வலம்புரி

## அமைச்சர் தொண்டமான் வன்னிக்கு விஜயம்

போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை பார்வையிடுவதற்காக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான மலையக அரசியல் கட்சி குழுவொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவுக்கு சென்றதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கடந்த 40 வருடங்களாக வவுனியாவில் இயங்கி வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தினூடாக வடக்கில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அக்கட்சி குறிப்பிட்டது. (எ)

## அனோமாவின் பெயரில் ஜனாதிபதிக்கு அழைப்பு

### அலரிமாளிகையில் பரபரப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பு ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாக கொழும்பில் இருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் எனும் ஊடகம் தெரிவித்துள்ளது.

இத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட பெண் தன்னை அனோமா பொன்சேகா என அறிமுகப்படுத்திக்கொண்டு ஜனாதிபதியுடன் உரையாட வேண்டும் என சிங்களத்தில் கேட்டுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவின் குடும்பத்தின் சார்பில் அவர் ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலைக் கடலில் நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கடலில் குளிக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த இளைஞன் சக நண்பர்களுடன் கீரிமலைக் கடலுக்குச் சென்றவேளை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தெல்லிப்பழை பெரியபுலம் கிராமத்தைச் (20ஆம் பக்கம் பார்க்க)

# ‘எந்தவொரு கூட்டத்துக்கும் ஆளுநர் அழைத்ததில்லை’

## குற்றம் சாட்டுகிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

**வடக்கில் பெரிய அரசியல் கட்சியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தவொரு கூட்டங்களுக்கும் ஆளுநர் அழைத்ததில்லை. எந்தவொரு விடயம் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1958 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டது. அதற்கான ஒழுங்கு விதிகள் 1966 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டன. இதன்படி வடக்கு கிழக்கின் சகல அரச நடவடிக்கைகள் மற்றும் பொது நடவடிக்கைள் பதிவுகள் அனைத்தும் தமிழ் மொழி மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்துக்கு அரசாங்க அதிபராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டமை குறித்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பேசினார் எனினும் அம்பாறை மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் அங்கு தமிழ்பேசும் அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டது கிடையாது.

அங்கு தமிழ் பேசும் மக்கள் 74 வீதமானவர்கள் உள்ளனர். இது இவ்வாறு இருக்க திருகோணமலை மாவட்டமானது 75சதவீதம் தமிழ் பேசும் மக்களை கொண்டிருக்கின்றது. எனினும் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இதுவரையில் தமிழ் பேசும் அரசாங்க அதிபர் ஒருவர் அங்கு நியமிக்கப்ப்ட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில்தான் இனிப்பான வார்த்தைகளையும் இன ஐக்கியம் குறித்தும் இங்கு பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபடைந்து 30 மாதங்கள் கடந்து விட்டன. எனினும் யுத்தத்தின் காயங்கள் இன்னும் ஆறவில்லை. இந்நிலையில் அரசாங்கம் முன்னுதாரணமாக நடந்து கொள்ள வேண்டும். ஆனாலும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்கள அரச அதிகாரிகளை கொண்டு செல்வதே அரசாங்கத்தின் முன்னுதாரணமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சகல தேவைகளையும் நிறைவேற்றியதன் பின்னர் அங்கு சிங்கள அதிகாரிகளை கொண்டு செல்வது வேறு விடயமாகும்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காகவே ஆயுதப்போராட்டத்தினை நடத்தினர். அதில் தீர்வு கிடைக்கவில்லை. தற்போது பேச்சுவார்த்தைகளும் இழுபறியில் கிடக்கின்றன. பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு சுமுக வாழ்க்கையை ஏற்படுத்தியதன் பின்னர் உங்களது அதிகாரங்களை அங்கு கொண்டு சென்றால் யாரும்எதுவும் கேட்கப் போவதில்லை.

அரசாங்கம் விரும்பினால் வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறும். விரும்பாவிட்டால் நடைபெறாது என்ற நிலையில் தான் வடக்கின் நிலையிருக்கின்றது.

வடமாகாணத்தின் ஆளுநராக இருக்கின்றவர் அங்குள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருடன் எந்த விடயம் குறித்தும் கலந்து பேசுவது கிடையாது. ஆளும்தரப்பு உறுப்பினர்களுடன் பேசியிருக்கலாம். வடக்கில் பெரிய அரசியல் கட்சியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர் எந்தவொரு கூட்டங்களுக்கும் அழைத்ததில்லை.

வடமாகாண ஆளுநர் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறார். நியமனங்கள் கூட அங்கு ஆளுநருக்கும் அமைச்சர் ஒருவருக்கும் தேவைப்பட்ட வகையிலேயே இடம் பெறுகின்றன. வடமாகாண ஆளுநர் படைத்தரப்பின் அதிகாரியாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கடற்படை அதிகாரியாகவும் இருக்கின்றனர். இவர்கள் ஜனாதிபதிக்கு தேவையாக இருப்பதால் ஒன்றும் நடப்பதில்லை.

ஏனைய மாவட்டங்களிலும் கூட ஆளுநர்கள் இவ்வாறு நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களாக இருக்கின்றார்களா எனக் கேட்கின்றேன். வடக்கில் ஒரு ஜனநாயகம் ஏனையப் பகுதிகளில் இன்னுமொரு ஜனநாயகமா இடம் பெறு கின் றது.

யாழ்ப்பாணம் செல்கையில் பார்த்தால் படையினருக்கான நினைவுச்சின்னங்கள் நிறைந்து காணப்படுகின்றன. எனினும் தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக போராடியதன் நினைவாக இருந்த நினைவுச்சின்னங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன என சுரேஸ்பிரேமச்சந்திரன் தன் உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# எந்தவொரு இனத்தையும் யாரும் அடிமைப்படுத்த முடியாது

## சிறைச்சாலைகள் அமைச்சர் தெரிவிப்பு

எந்தவொரு இனமும் எந்தவொரு இனத்தை அடிமைப்படுத்த நாம் இடம் கொடுக்கமாட்டோம். ஜனநாயக ரீதியான சமூகத்தினை கட்டியெழுப் பவே நாம் விரும்புகின்றோம் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர் தெரிவித்தார்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் சமூகத்தோடு இணையும் வைபவம் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்கான கடன் வழங்கும் வைபவம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் புனர்வாழ்வு பெற்ற 46 பேர் (இன்று) விடுதலையாகி இருக் கிறார்கள். அவர்களின் சுயதொழிலுக்கான கடன் உதவியைப் பெற்று வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை தொடரவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கடன் உதவிகளைப் பெறுவதற்காக ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 200 பேர் முன்னாள் போராளிகள். நாம் இவர்களுக்காக 160 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளோம். இவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு நூற்றுக்கு நான்கு வீதமே வட்டியாக அறவிடப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாண சபை என்பன இணைந்து இக்கடன் உதவியினை வழங்குகின்றன. இந்நாட்டில் முப்பது வருட காலப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் கடன் வழங்கும் நிகழ்வினை உன்னத பணியாகக் கருதியே வடக்கு கிழக்கு மாகாணங்கள் மிக வேகமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அபிவிருத்தி என்ற வகையில் நாட்டின் பொருளாதாரத்தினை மட்டும் அபிவிருத்தி செய்வது பொருத் தமாகாது. முதலில் நாம் மனித மணங்களை அபி விருத்திசெய்ய வேண்டும். யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி என்று சொல்லப்படும்போது பல அமைச்சுக்கள் இணைந்து செயல்படுத்துகின்றன. இதற்காக 55 ஆயிரம் மில்லியன் ரூபாய் வரை செலவு செய்யப்பட இருக்கிறது.

இடம்பெயர்ந்த, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றப் பணிகளுக்காக ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த உதவிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு சென்றடைய வேண்டும். அதனை அவர்கள் முறையாக பயன்படுத்தி சமூகத்தில் உயர் நிலையை அடைய வேண்டும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மனித வளம் என்பது மிக முக்கியமான தொன்றாகும். எவ்வளவுதான் நிதி ஒதுக்கப் பட்டாலும் முதலீடுகள் செய்யப்பட்டாலும் அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு மனிதவளம் மிகமுக் கியமானதாகும்.

ஆகவேதான் நாம் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை விடுதலை செய்து வருகின்றோம். அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் பொழுது அதனை எதிர்ப்பதற்கு, விமர் சிப்பதற்கு அரசியல் வியாபாரம் செய்யும் சிலரும் இச்சமூகத்தில் இருக்கின்றார்கள்.

இவ்வாறான முயற்சிகளில் தலையிட்டு குழப்புவார்கள். அண்மையில் கூட முன்னாள் போராளிகளை பாராளுமன்றத்திற்கு அழைத்துச் சென்றபோது அதனையும் விமர்சித்துள்ளனர் அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகள்.

இந்நாட்டின் வளர்ச்சியை குழப்பி, இன, மத, மொழி ரீதியாகப் பிரித்துப்பார்த்து இனங்களுக்கிடையில் வன்முறையினைத் தூண்டிவிட்டு அரசியல்நடத்துபவர்களை இந்த மக்கள் அடையாளம் கண்டு அவர்களை புறந்தள்ள வேண்டும்.

புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து வெளியேறுகின்ற முன்னாள் போராளிகளை தனிமைப்படுத்தவேண்டாம். எக்காரணம் கொண்டும் இவர்களை சமூகத்திலிருந்து பிரித்துப்பார்க்கவேண்டாம் எச்சந்தர்ப்பத்திலும் நாம்இவர்களைக்கைவிடமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)






## மரண அறிவித்தல்

## துரையப்பா ஸ்ரீதுரைராஜ்



சுழிபுரம் கிழக்குச் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், சுவிஸிலேன்ட் (பாசல்)லை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஸ்ரீதுரைராஜ் 10.12.2011 சனிக்கிழமையன்று காலமானார். அன்னார் காலம் சென்ற (பிரபல வர்த்தகர் நுவரெலியா) துரையப்பா, தெய்வராணியின் பாசமிகு மூத்த மகனும், திருமகளின் அன்புக் கணவரும், விபுசனின் அன்புத் தந்தையும், ஸ்ரீஈஸராஜ்(ஈசன்), ஸ்ரீதங்கபாமா (பாமா), ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ்(செல்வகுமார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பெருமாள் கடவை வீதி,
அளவெட்டி.

தகவல் : சகோதரன்
ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ்(செல்வகுமார்)

(C-5176)


## காணி தேவை

01) A9 வீதியில் (247 Km-261Km) கிளிநொச்சியில் தேவை.
02) A9 வீதியில் (220Km-224 Km) மாங்குளத்தில் தேவை.
1 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்புகளுக்கு :-
0779155756

(6942)

# இன்று ஒரு தகவல்

## இல்லாத ஒன்று

இருட்டு நேரம் ஒருவன் ஓடிப்போய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வந்தான்.

"என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் மற்றவன்.

"இருட்டை விரட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

இவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"என்ன கூறுகிறீர்கள்... இருட்டு என்பது இல்லாத ஒன்றா?" என்று கேட்டான்.

இதற்கு அவர் விளக்கம் கொடுத்தார்.

இருட்டு என்ற ஒன்று தனியாக இல்லை. வெளிச்சம் இல்லாத நிலைதான் அது. ஒரு இடத்திலே வெளிச்சம் இருந்தால், அங்கு பிரகாசம் இருக்கும். அந்த இடத்தில் வெளிச்சம் இல்லாவிட்டால் இருள் சூழ்ந்து கொள்ளும்.

நாம் விளையாட்டுத்தனமாக நினைக்கிறோம்... இருட்டு என்ற ஒன்று ஏற்கனவே இருக்கிறது. வெளிச்சத்தைக் கண்டவுடனே அது எழுந்து ஓடிப்போகிறது என்று நினைக்கிறோம். இதில் இருட்டை விரட்டுகிறோம் என்ற வீர வசனம் வேறு கூறிக்கொள்கிறோம்.

வெளிச்சம் இல்லாமை காரணமாகத்தான் இருட்டு என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மனதினுள் 'பயம்' என்று சொல்கிறோம். அதுகூட 'இருட்டு' மாதிரிதான்.

இதேமாதிரி அன்பு இல்லாமை தான் பயம் என்பது வருகிறது. அன்பு என்ற விளக்கை இங்கே ஏற்றி வைத்துவிட்டால், பயம் என்ற இருட்டு இருக்காது.

ஒருநாள் முல்லாவும் அவருடைய மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று புயல்... வெள்ளம்... படகு இப்படியும் அப்படியும் அசைய ஆரம்பித்தது. எல்லோருக்கும் பயம் ஏற்பட ஆரம்பித்தது. முல்லா மட்டும் பயமில்லாமல் அமைதியாக இருந்தார்.

"ஏன் உங்களுக்குப் பயமில்லையா? என்று அவரது மனைவி மிகவும் ஆச்சரியமாக விசாரித்தார்.

உடனே இடுப்பில் இருந்த கத்தியை எடுத்தார். மனைவியின் கழுத்துக்கு நேராக நீட்டினாார். குத்தப் போகிற மாதிரி ஓங்கினார். ஆனால், அவரது மனைவியின் முகத்திலே எதுவித சலனமும் ஏற்படவில்லை.

இப்போது முல்லா கேட்டார்; "கத்தி என்றால்,உனக்குப் பயமில்லையா?" என்றார்.

இதற்கு அவரது மனைவி "கத்தி அபாயகரமானதாக இருக்கலாம்... ஆனால், அதைப் பிடித்திருக்கிறவர் என் மேலே அளவு கடந்த அன்பு வைத்துள்ளார். அவர் என் கணவர் அல்லவா... அதனால்தான் நான் பயப்படவில்லை" என்றார்.

அப்போது முல்லா சொன்னார். ".அதேமாதிரிதான் எனக்கும்... இந்த அலைகள் ஆபத்தாக இருக்கலாம். இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கிற கடவுள் 'அன்பு' மயமானவர். அதனாலே எனக்குப் பயம் இல்லை"

அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனாலே அன்பு இருந்தது. நம்பிக்கை இல்லாவிட்டால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லாவிடின் பயம் ஏற்பட்டிருக்கும். படகில் இருந்தவர்களைப் போல அவரும் பயந்திருப்பார்.

இதை நமது வாழ்க்கையில் இணைத்துப் பார்க்க வேண்டும்.


நமக்கு பயம் ஏற்படுகிறது என்றால் என்ன அர்த்தம்? எம் மேலே நமக்கு நம்பிக்கை இல்லையென்று அர்த்தம்.

எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள்... தவறில்லை. ஆனால், எதிர்காலத்திலே என்ன நடக்கும் என்று கற்பனையிலே பயந்து கொண்டு இருக்காதீர்கள். அதனால் உங்களின் மகிழ்ச்சிதான் பாழாகும்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நேர்மைத் தன்மை குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களை காலம் தாழ்த்தவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விரும்புவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

1987 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அரிய சந்தர்ப்பங்களை தமிழ்த் தலைமைகள் உதாசீனம் செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, தமிழ் மக்களின் அவல நிலைமைகளுக்கு இந்த தமிழ் அரசியல் தலைவர்களே பொறுப்பு சொல்ல வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படக்கூடாது என்ற முனைப்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

நடைமுறைச் சாத்தியமானதும் பொருத்தமானதுமான தீர்வுத்திட்டமொன்றை முன்வைப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு நல்ல சந்தர்ப்பமாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கை மீள இணைப்பதனை விடவும் பல முக்கிய அவசர பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சகல பிரிவினைகளையும் களைந்து அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# க.பொ.த.(சா/த) பரீட்சைகள் இன்று

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் இன்றைய தினம் ஆரம்பமாகிறது.

வரலாற்றில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள பரீட்சைகளில் தோற்றவுள்ளனர்.

இந்தப் பரீட்சைக்காக 5 இலட்சத்து 31 ஆயிரத்து 325 பேர் தோற்றவிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக நாடு முழுவதும் 3 ஆயிரத்து 920 மத்திய நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன்று ஆரம்பமாகின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (அ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 200 |
| தக்காளி | 140 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 20 |
| கோவா | 70 | 90 | 65 |
| கரட் | 80 | 120 | 90 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 100 | 60 |
| வாழைக்காய் | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 110 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 90 |
| பாகற்காய் | 130 | 180 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 110 |
| லீக்ஸ் | 50 | 100 | -- |
| பீற்றூட் | -- | 80 | 50 |
| கறிமிளகாய் | 140 | 160 | 130 |
| முருங்கைக்காய் | -- | -- | 100 |
| போஞ்சி | -- | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 18 | 40 | 20 |
| தேசிக்காய் | 130 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

# இராசி பலன்

*12.12.2011*
*(கார்த்திகை 26, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு*
*துதியை முன்னிரவு 10.04 மணிவரை*
*திருவாதிரை முன்னிரவு 9.54 மணிவரை*
*இராகுகாலம் 7.50-9.20 மணிவரை*
*சுபநேரம் 12.20-1.50 மணிவரை*
*நான்காம் கார்த்திகை சோமவாரம்.*

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலனுக்காக புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், தொல்லை தந்தவர்கள் விலகுவர்.

**இடபம்** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆனந்தமான நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியம் நல்லபடியாக நடைபெறும், நண்பர்கள் சிலருடன் இணைந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், சுப செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிங்கம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளை அறியலாம்,. பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், பொருளாதார நிலை உயரும்.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி அமைப்பீர்கள், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அந்நியரின் உதவி கிடைக்கும்.

**துலாம்** விடாமுயற்சி மூலம் வெற்றியடைய வேண்டிய நாள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேருவார்கள், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும்.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் நிம்மதி கிடைக்கும்.

**தனுசு** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வராத உறவினர்கள் திடீரென்று வீடு தேடி வரலாம், அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசி மூலம் சந்தோச செய்தி வரலாம்.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும், உறவினர்களின் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி பெறும், தொழில் வளர்ந்து மேலோங்கும், ஆரோக்கியம் சீராக இருக்கும், உற்சாகம் அடைவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சி கருதி அனுபவம்மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், சொத்துக்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வாகனம் பழுது பார்க்கும் செலவு அதிகரிக்கும்.

வளவன்

# தீய பழக்கங்களை கைவிட்டு புற்றுநோயிலிருந்து விடுபடுவோம்

## வைத்தியக்லாநிதி ந.சிவராசா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்று நோய்க்கு சிகிச்சை பெறவருவோரில் 1/3 பங்கு நோயாளர்களே சிகிச்சை பலனளிக் காது உயிரிழக்கின்றனர் என வைத்திய கலாநிதி ந.சிவராஜா தெரிவித்தார்.

யாழ்.போனா வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயகுமரன் எழுதிய புற்றுநோய் விழிப்புண ர்வு நூல் வெளியீட்டின் போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் புற்றுநோயால் இறப் பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகி ன்றது. இதற்கு காரணம் நோய் தாக்கம் அதிகரித்தபின் வைத்தியசாலைகளை அணு குவதாகும்.

நோய் ஆரம்பத்திலேயே இவர்கள் வைத் திய சாலையினை அணுகினால் புற்றுநோ யினை பூரணமாக குணப்படுத்திவிடலாம்.

2007 ஆம் ஆண்டு புற்றுநோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 18 பேராகவும் 2009 ஆம் ஆண்டு ஆயிரத்து 110 பேராகவும் அதிகரித்துள்ளது.

இதற்கு காரணம் மக்களிடையே புற்று நோய் குறித்த விழிப்புணர்வு இன்மையே. இங்கு ஏற்படும் புற்று நோய்களில் 21 சத வீதம் உடலோடு சம்பந்தப்பட்டனவாகவும் 16 சதவீதம் சுவாசத்தோடும் 7 சதவீதம் மார் பகங்களோடும் 7 சதவீதம் கர்ப்பப்பைகளோ டும் தொடர்புடைய புற்றுநோய்களாக காணப் படுகின்றன.

ஏறத்தாழ 1950 ஆம் ஆண்டுகளின் பின்னர் இதன் தாக்கம் அதிகரித்து செல் கிறது. இலங்கையர்களாகியநாம்நல்லகோதுமை மாவினை வெளிநாடுகளிற்கு ஏற்றுமதி செய்து விட்டு தரமற்ற கோதுமை மாவினை நாம் உண்ணுகின்றோம். இதனால் 20 சதவீத பாடசாலை மாணவர்கள் நிறைஅதிகரிப்ப தோடு 30 சதவீத பாடசாலை மாணவர்கள் நிறைகுறைந்து போசாக்கற்றவர்களாக காண ப்படுகின்றனர்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் புகைத்தல், மதுபான பாவனைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் இந்நோய் இலகுவில் ஏற்படக்கூடிய வாய் ப்புக்களே அதிகம் ஏற்படுகின்றது.

புற்று நோயினை தடுப்பதற்கு எமது பழக்க வழக்கங்களை மாற்றுவதன் முலமே கட்டுப் படுத்தலாம். சமுகத்திலுள்ள அனைவரும் சுகாதாரத்தினை கடைப்பிடிக்க வேண்டும்.

தாதிய பயிற்சி மாணவர்கள் சிறந்த சேவை யாற்றுகின்றனர். அதேபோல் இங்கு கடமை புரியம் இளம் வைத்தியர்களும் சிறந்த சேவை யாற்றுகின்றனர். இனிவரும் காலங்களில் இப்புற்று நோயினை குறைப்பதற்கு நடவடிக் கைகள் பல எடுக்கப்படுதோடு புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நூல்கள் வெளி வர வேண்டுமெனவும்ள அவர் மேலும் தெரி வித்தார். (அ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றம் பற்றிய அவசர விசேட கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்திற்கு வசாவிளான் கிழக்கு ஜே/244, வசாவிள்ரான் மேற்கு ஜே/245 பகுதி வாழ் பொதுமக்கள் அனைவரும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதன்போதுவசாவிளான்கிழக்குவடமூலை ஆசீர் பாடசாலை மீண்டும் ஆரம்பிப்பதற் கான கலந்துரையாடல் நடைபெறவுள்ள தாக செயலாளர் .ப. உமைவேல் குறிப்பிட் டுள்ளார். (அ)

# பொங்கல் திருவிழாவை முன்னிட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் அனுசரணையுடன் யாழ்.நகரில் நடத்தப்படவிருக்கும் யாழ்ப் பாணத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக விளையாட்டு மற் றும் கலைநிகழ்வுகளுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அதற்காக கலைஞர் களிடமிருந்து விளையாட்டு வீரர்களிடமிரு ந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறந்த தமிழன்,தமிழிச்சி தெரிவுப்போட்டி, பாரம்பரிய முறையில் பொங்கல் வைக்கும் போட்டி ஆகியவற்றுடன் விளையாட்டுப்போட்டி, மாட்டுவண்டிச் சவாரி போட்டியும் மற்றும் பெண்களுக்கான சங்கீத கதிரைப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் விண்ணப்பப்படிவத்தை 100 ரூபா செலுத்தி யாழ்.மாநகரசபை கலாசாரப் பிரிவில் பெற் றுக் கொள்ளலாம்.பூர்த்தி செய்யப்பட்ட விண் ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணத் திரு விழா-பொங்கல் 2012, கலாசாரப்பிரிவு, யாழ்ப்பர்ணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.மாநகரசபை ஏற்பாட்டுகுழு அறிவித்துள்ளது. (அ)




# குருபூசை தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சைவ பரிபாலனசபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசை தினமும் ஆகில இலங்கை சைவ நெறித்தேர்வு பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு இலக்கம் 66 கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவநெறிப்புரவலர் த.சண்முலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் இந்து சயமக லாசார திணைக்கள சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் பாடசாலை அதிபர்கள் ,ஆசிரிய ர்கள், மாணவர்கள், சைவசமயப் பெரியார் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

# தொற்றாதநோய் சிகிச்சைப்பிரிவு சாவகச்சேரி வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

வடமாகாணத்தில் முதன்முறையாக 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான தொற்றாத நோய்களுக்கான சிகிச்சைப்பிரிவு சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்க் ப்படவுள்ளது.

35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருவரும் இச்சிகிச்சைப் பிரிவில் தொற்றாத நோய்கள் தொடர்பான விபரங்களை பெற் றுக் கொள்ளலாம்.

இதற்காக இச்சிகிச்சையில் கலந்து கொள் ளும் அனைவருக்கும் சுயவிபர மருத்துவ அறிக்கை புத்தகம் வழங்கப்பட்டு மாதாந்தம் சிகிச்சைப்பிரிவில் பரிசோதனைகள் மேற் கொள்ளப்படும்.

வாரத்தில் இரு நாட்கள் நடத்தப்படவுள்ள இச்சிகிச்சைப் பிரிவில் இதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், பாரிசவாதம், நீரிழிவு, புற்று நோய், சுவாச நோய்கள் உட்பட பல்வேறு உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இந்நோய்கள் இல்லாது சுகதேகியாக வாழ்வதற்கு அருந்த வேண்டிய உணவு வகைகள் பற்றியும் நோய்கள் வராது தடு ப்பதற்கான ஆலோசனைகள் பற்றியும் இச்சி கிச்சைப்பிரிவில் ஆலோசனை வழங்கப்படும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையின் கீழ் நாட்டில் உள்ள 35 வய திற்கு மேற்பட்டோருக்கான தொற்றாத நோய் களுக்கான சிகிச்சைப்பிரிவு நாடெங்கிலும் உள்ள வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்ப டவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்க ஆட்சிக்காலத்தில் பெண்களுக்கு மட் டும் என ஆரம்பிக்கப்பட்ட சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவு போன்று இப்பிரிவையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து ள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# சர்வதேச சமூகம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு தரவேண்டும்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனிதவுரிமை தினத்திலேயே பாதிக்கப்பட்ட மக்களது ஜனநாயக ரீதியி லான போராட்டத்தை நடத்தக்கூட உரிமை யில்லை. இதனை ஆயுதங்களை வழங்கி இலங்கைத் தமிழ் மக்களை கொன்றுகுவித்த சர்வதேசம் ஏற்றுக் கொள்கின்றதா என முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக காணா மல் போனோர் மற்றும் அரசியல்கைதிகளை விடுவிக்கக் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களா கிய நாம் மனிதவுரிமை தினத்தில் கூட ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்த உரிமையில்லை என்றால் இது ஜனநாயக நாடு என்பதில் அர்த்தமில்லை.

சோதனை நடவடிக்கைகள் ஏன்? நாங்க ளும் இந்நாட்டு மக்கள் தானே. தினம் அச்ச த்துடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு பேரினவாதிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட் டுள்ளது.

அரசியல்கைதிகள் எந்தக் காரணமும் இன்றி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றார்கள். கடத்த ப்பட்டோர், காணாமல் போனோர் பற்றி எந்த தகவலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இவர்களை விடுதலை செய்யக்கோரி இன்று பாதிக்கப்பட்டவர்கள் அழும் கண்ணீ ருக்கு இலங்கை அரசு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கணவனை இழந்து, பிள்ளையை இழந்து தனது பிள்ளை உயிரோடு இருக்கின்றரா இல்லையா என்று ஏங்கித்தவிக்கும் எத்தனை யோ தாய்மார்களின் அழுகை இவ்வரசிற்கு கேட்கவில்லையா?

அரசியல்கைதிகளுக்கு விடுதலை வழங்க வேண்டும். போர்க்கைதிகளை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சர்வதேசமுமே எமது தேசிய இனப்பிரச்சி னைக்கு தீர்வு ஒன்றை பெற்றுத் தர வேண்டும்.

ஈழத்தில் நடைபெற்ற போரில் அரசிற்கு ஆயுதங்களை அள்ளி வழங்கி தமிழர்களை ஏமாற்றி திட்டமிட்டு இன அழிப்பை மேற் கொண்ட மேற்குலகம் எமக்கான அரசியல் தீர்ப்பினை பெற்றுத்தரவேண்டும்.

இன்று தொடங்கிய இப் போராட்டம் எமது மக்களுக்கு தீர்ப்பு கிடைக்கும் வரை தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)








யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி த.ஜெயக்குமரன் எழுதிய நோய் நாடி நோய் முதல் நாடி (புற்றுநோய் விழிப்புணர்வு நூல்) நூல் வெளியீட்டு விழா யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருக்க நல்லை அதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும் இதில் உலக சுகாதார ஆலோசகர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சாளின்)







புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் நேற்று வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் முழங்காவில் மத்திய மகா வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# தண்டனை விதிப்பது தொடர்பில் நீதவான்களுக்கு வழிகாட்டல்

## நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

தண்டனை விதிப்பது தொடர்பில் நீதவான்களுக்கு புதிய வழிகாட்டல்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் தண்டனைகளில் சமநிலையை பேணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தண்டனை விதிப்பது குறித்த கொள்கைகள் சட்டமாக அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அடுத்த ஆண்டு இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புதிய சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட ஓர் குற்றச் செயல் தொடர்பில் குற்றவாளியாக அறிவிக்கப்படும் நபர்களுக்கு ஒரே வித மான தண்டனைகள் விதிக்கப்படும்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் புதிய சட்டங்கள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தண்டனை வழங்குவது தொடர்பில் தற்போது எந்தவிதமான வரைமுறைகளும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. சாட்சியளித்தல், சிறுவர் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பிலும் புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட உள்ளதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சாட்சிகளை பாதுகாத்தல் தொடர்பிலும் அரசாங்கம் சட்டமொன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிரிக்கெட் வீரர்களுக்கு சம்பளம் வழங்க 50 மில்லியன் ஒதுக்கீடு

## அமைச்சர் அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக திறைசேரி 50 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுஉரிய நேரத்தில் பாரிய உதவியாக இருக்கும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு இலங்கை கிரிக்கெட்டில் நடைமுறையிலுள்ள நிதிப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரியில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் மேலும் ஒரு நிதி உதவியை இலங்கை கிரிக்கெட்டுக்கு வழங்கவுள்ளது.

இதன்மூலம் முழுமையாக இலங்கை கிரிக்கெட் வீரர்களின் கொடுப்பனவு பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என்று அமைச்சர் அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 3 வருடங்களுக்கு மேற்பட்ட பனைகளை அழிப்பதை தடைசெய்யும் சட்டமூலம்

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட பனைகளை அழிப்பதை தடை செய்யும் சட்டமூலமொன்றை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள அமைச்சரின் வாசஸ் தலத்தில் பனைவள அபிவிருத்தி மேம்பாடு தொடர்பிலான விசேட கூட்டமொன்று அமைச்சரின் தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பனை மரங்கள் தறிப்பது தொடர்பில் தடைச் சட்டமூலமொன்று தற்போது நடைமுறையில் இருந்து வரும் நிலையில் பனை வடலிகள் பல ஆங்காங்கே அழிக்கப்பட்டு வருவதை அவதானித்ததைக் கொண்டே அதனைத் தடுக்கும் வகையில் சட்டமூலமொன்றைக் கொண்டு வருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் யாழ். கைதடி பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையத்தை அண்மித்த பகுதியில் மாதிரி பனை பண்ணை ஒன்றை அமைப்பது தொடர்பிலும் பனைசார் அனைத்து உற்பத்திகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும் முகமாக விற்பனை மற்றும் கண்காட்சிக் கூடமொன்றை அமைப்பது தொடர்பிலும் உரிய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பிலும் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் கிளைக் கட்டடத்தில் பனைசார் உணவுப் பொருட்களையும் ஏனைய உற்பத்திகளையும் விற்பனை செய்யக்கூடிய நிலையமொன்றை விரைவில் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# இலங்கை, இந்தியா, மாலைதீவுக்கான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கத்திட்டம்

இலங்கை, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப திட்ட அறிக்கை ஒன்று இலங்கையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையின் இணக்கப்பாடு கோரப்பட்டுள்ளதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் குறிப்பிட்டார்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பான சார்க் அமைப்பின் வழிகாட்டலின் கீழ் இந்த பயணிகள் கப்பல் சேவையை நடைமுறைபடுத்த எதிர்பார்க்கப்டுகின்றது.

கடந்த முறை சார்க் மாநாட்டின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவின் தூத்துக் குடிக்கும் கொழும்புக்கும் இடையில் முன் னெடுக்கப்படுகின்ற பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையை சம்பந்தப்பட்ட நிறுவனம் இடைநிறுத்த நடவடிக்கை மேற் கொண்டிருந்தது.

இந்தச் சேவையின் மூலம் போதிய இலாபம் கிடைக்காமை காரணமாக சம்பந்தப்பட்ட நிறுவனம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. (அ-2)

# யாத்திரிகர்களுக்கு அறிவுறுத்தல்

சிவனொளிபாதமலைக்கான யாத்திரைப் பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் அங்கு செல்லும் மக்கள் மதுபானம், பொலித்தீன், பிளாஸ்ரிக், போதைப் பொருள் போன்றவற்றை எடுத்துச் செல்வதை தவிர்க்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன் மரணங்கள் சம்பவிப்பதால் ஆறுகள் மற்றும் நீரோடைகளில் குளிப்பதையும் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த சிவனொளிபாதமலைக்கான யாத்திரைப் பருவகாலத்தின் போது பொதுமக்கள் ரயிலின் மிதிபலகையில் நின்று கொண்டு பயணித்ததால் அதிகளவான மரணங்கள் சம்பவித்ததாகவும் இதனால் ரயில் மிதிபலகையிலோ அல்லது ரயிலின் கூரை மீதோ பயணிக்க வேண்டாமென பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏதாவது அவசர நிலைமையேதும் ஏற்படின் பொதுமக்கள் 0512223882, 045 2232222 என்ற தொலைபேசி இலகத்தினூடாக தொடர்புகொண்டு பொலிஸாருக்கு அறிவிக்கமுடியும். (அ-2)

# சுவைமிக்க காளான் உணவுகள்


கார்த்திகை, மார்கழி போன்ற மாதங்களிலும் சில விசேட தினங்களிலும் சந்தைகளில் மரக்கறிகளின் விலையானது அதிகரித்துக் காணப்படும். இதனால் சாதாரண வருமானமுள்ள மக்களின் உணவில் மரக்கறிகளை உள்ளெடுக்கும் அளவு குறைகின்றது. இதனை நிவர்த்தி செய்ய புரதச்சத்தை கொண்ட போசனை மிக்க உணவாக காளானை சேர்த்துக்கொள்ளுதல் நன்று.

அறுவடை செய்யப்பட்ட புதிய காளான் 100 கிராமில் அடங்கியுள்ள போசனைப் பொருட்களின் அளவுகள் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | நீர் | 91.0 கிராம் |
| 2. | சக்தி | 13 கிலோ கலோரி |
| 3. | புரதம் | 2.5 கிராம் |
| 4. | கொழுப்பு | 0.3 கிராம் |
| 5. | கல்சியம் | 20 மி.கிராம் |
| 6. | இரும்பு | 1 மி.கிராம் |
| 7. | தயமின் | 120 மைக்கிரோ கிராம் |
| 8. | ரைபோபிளேவின் | 500 மைக்கிரோ கிராம் |
| 9. | நயாசின் | 5.8 மி.கிராம் |
| 10. | விற்றமின் C | 3.0 மி.கிராம் |

யாழ்ப்பாண மாவட்டத்தில் 100 பயனாளிகளுக்கு காளான் செய்கையினை மேற்கொள்வதற்கான உள்ளீடுகளும் பயிற்சிகளும் விவசாயத்திணைக்களத் திட்டங்களின் கீழும் சமுர்த்தி திட்டத்தின் கீழும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடனும் வழங்கப்பட்டுள்ளன. குடாநாட்டிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் சராசரியாக 5 தொடக்கம் 7 வரையுான பயனாளிகள் காளான் செய்கையில் ஈடுபடுகின்றனர். எனவே, எங்களின் உணவிற்கு தேவையான காளான்களை இவர்களிடமிருந்து யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையை விற்பனை நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

போசனைப் பொருட்கள் நிறைந்த காளான்களில் இருந்து பலவிதமான உணவுவகைகளினை நம்மால் தயாரித்துக் கொள்ள முடியும். இக்காளான் உணவுகளைப் போசனை



யில் அதிகரிக்கும் பொருட்டு எவ்வகையான உணவு வகைகளை தயாரிக்கலாம் என்பதனை விவசாயத்திணைக்களத்தின் காளான் உற்பத்திப்பிரிவு உங்களுக்காகத் தருகின்றது. (தொடரும்)

கி.சிறீபாலசுந்தரம்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

# பெல் பொட்டிங்கர் நிறுவனத்தின் தொடர்பு குறித்து பாராளுமன்றில் குரல் கொடுப்போம்

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



அரசாங்கத்திற்கும் பெல் பொட்டிங்கர் நிறுவனத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையை தாமே எழுதியதாக மேற்படி நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது.இதனை ஜனாதிபதியின் ஊடாக பிரிவு நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் குறித்த நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ரவி கருணாநாயக்க கோரியுள்ளார்.

குறிப்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் வெளிவிவாகார அமைச்சின் முக்கிய பணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொண்டு மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் வரிப்பணத்தை கொண்டு அரசாங்கம் இவ்வாறு செயற்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.நாட்டின் நன் மதிப்பை உயர்த்தும் நோக்கிலான பிரசாரங்களுக்காக அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பாரியளவு பணத்தை வாரி வழங்கி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுடன் தொடர்புகளை பேணி வருவதாக அரசாங்கம் எதிர்க்கட்சியை குற்றம் சுமத்திய போதிலும் அதிகளவில் அரசாங்கமே தொடர்புகளை பேணி வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெல் பொட்டிங்கர் நிறுவன விவகாரம் குறித்து பாராளுமன்றிலும் வெளியிலும் குரல் கொடுக்க உத்தேசித்துள்ளதாக ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நிறுவனங்களின் ஒத்துழைப்பை இந்த அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விமர்சனங்களை தடுக்கும் நோக்கில் வெளிநாட்டு மக்கள் தொடர்பு நிறுவன ங்களுக்கு அரசாங்கம் செலவிட்ட பணம் தொடர்பாக தகவல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# இலச்சார்ச்சனை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இணுவில் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலச்சார்ச்சனைப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இலச்சார்ச்சனை நடைபெற்று மறுநாள் தேர்த் திருவிழாவும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழ்மை 108 கலச அபிஷேகமும் நடைபெறவுள்ளது என ஆதீனகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ)

# மனித உரிமைகளை மேம்படுத்த சமூக ஊடகங்களை பயன்படுத்தலாம்

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவிப்பு

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்த முடியும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மனித உரிமை மேம்பாட்டை மேற்கொள்வதற்கு சகலருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

21 ஆம் நூற்றாண்டில் சமூக ஊடகங்களின் மூலம் மனித உரிமைகளை மேம்படுத்துவது மிகவும் உசிதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது வாழும் உலகத்தை விடவும் முற்றிலும் மாறுபட்ட ஓர் கட்டமைப்பின் கீழ் சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் குறித்து பிரித்தானியா கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

நவீன வரலாற்றில் அதிகளவில் மொழி பெயர்க்கப்பட்ட ஆவணமாக சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு; யாழ்.வர்த்தகர்கள் அதிர்ச்சியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்தவாரம் தொடர்ச்சியாக இடம்பெற்ற பல கொள்ளை சம்பவங்களினால் பல வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

யாழ். திருநெல்வேலி சந்தைப் பகுதிகளில் அமைந்துள்ள 8 வர்த்தக நிலையங்கள் ஒரே இரவில் உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு தினங்களின் பின்னர் வடமராட்சியின் நெல்லியடியில் அமைந்திருந்த 4 வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள்,பணம் உட்பட பல இலட்சம் பெறுமதியான உடைமைகள் கொள்ளையிடப்பட்டன.

அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்திருந்த பழக்கடை உடைக்கப்பட்டு சுமார் 80 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மேலும் புதன்கிழமை இரவு யாழ்.நகர் பகுதியில் அமைந்திருந்த மின்சாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொள்ளை சம்பவங்கள் அனைத்தும் பலாலி வீதி, பருத்தித்துறை வீதி மற்றும் யாழ். நகரை அண்டிய பகுதிகளிலேயே இடம் பெற்றுள்ளன.

கண்காணிப்பு மிகுந்துள்ள இப்பகுதிகளில் இந்தத் துணிகர கொள்ளைச்சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமையினால் பொதுமக்கள் உட்பட வர்த்தகர்களும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். (அ-2)

# வெட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு அரசடி பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பானவுள்ள இரும்புத் தொழிற்சாலையிலிருந்து வெட்டுக் காயங்களுடன் இளைஞரொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தொழிற்சாலையில் உறங்கிக் கொண்டிருந்த காவலாளியும் கடும் வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் இன்று காலை அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாண்டிருப்பு இரண்டாம் பிரிவைச் சேர்ந்த இரும்புத் தொழிற்சாலை உரிமையாளரின் மகனான சுந்தரலிங்கம் ரஞ்சித் (வயது 17) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதேவேளை ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த உதயன் என்ற காவலாளியே வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இவர்கள் இரும்புத் தொழிற்சாலையில் உறங்கிக் கொண்டிருந்த போது கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# த.தே.கூ.பின் யோசனைத்திட்டத்தை அரசு முழுமையாக நிராகரிக்கவில்லை

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யோசனைத்திட்டத்தை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட யோசனைத்திட்டத்தின் மூன்று அம்சங்கள் தொடர்பில் சர்ச்சை நிலவுவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று விடயங்கள் தொடர்பில் சில சர்ச்சைகள் நிலவுவதாக மட்டுமே அரசாங்கம் தெரிவித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கை மீள இணைத்தல், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் இந்த சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் கூட அரசாங்கம் எதிர்ப்பை வெளியிடவில்லை எனவும் மாறாக வேறு விதமாக பொலிஸ் அதிகாரங்களை பகிர்வ்து குறித்து அரசாங்கம் பரிந்துரை செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

காணி அதிகாரங்களை பகிர்வது தொடர்பிலும் அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்களை வழங்குவதில் சில பிரச்சினைகள் காரணப்படுவதாக அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.யோசனைத்திட்டங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் மீனவர்கள் தங்களது 10 நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு மீண்டும் தொழிலுக்கு திரும்பினர்.

கச்சதீவு அருகே மீன்பிடித்த தங்கச்சி மடம் மீனவர்கள் 5 பேரை இலங்கை கடற்படையினர் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிறைபிடித்தனர்.போதைப்பொருள் கடத்தியதாக வழக்கு பதிவு செய்து யாழ்ப்பாண சிறையில் மீனவர்கள் அடைக்கப்பட்டனர்.எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அவர்களை காவலில் வைக்கமல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சிறையில் உள்ள மீனவர்களை மீட்க வலியுறுத்த இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த மாதம் 30 ஆம் திகதி காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

10 நாட்கள் நீடித்த போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு நேற்று முன்தினம் அனைத்து மீனவர்களும் கடலுக்குச் சென்றனர். மீனவர்கள் கூறுகையில், அறிவித்தபடி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்கவும் ஐந்து மீனவர்களும் 19 ஆம் திகதி விடுவிக்கப்படாவிட்டால் அன்றைய தினம் ரயில், பஸ் மறியலில் ஈடுபடவும் முடிவு செய்துள்ளோம் என்றனர். (அ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் ஜீவரத்தினம் சின்னப்பிள்ளை



கொற்றாவத்தையை சேர்ந்த திருமதி. ஜீவரத்தினம் சின்னப்பிள்ளை 10.12.2011 அன்று பிற்பகல் நல்லூரில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு.வடிவேலு ஜீவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் சேதுப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரியும் முரளீதரன் (Srilanka Insurance Corporat,on Ltd,-Jaffna) கிரிதரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற பாக்கியம் , இராஜ ரட்ணம், பார்வதிப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 13.12.2011 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு இல.555, பருத்தித்துறை வீதி, நல்லூரில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


தகவல் :-
ஜீ.முரளீதரன் -மகன்.

இல.555, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (6952)

தொலைபேசி:- 0217200387, 0777 844282

# கண்ணீர் அஞ்சலி

## திரு. விஜயரட்ணம் கமலநாதன்



தம்பி அண்ணா என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. வி.கமலநாதன் அவர்கள் தெல்லிப்பளையில் ஒரு முடிசூடா மன்னன். இவரின் பணி துர்க்கை அம்மன் கோயிலுடனும், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்துடனும் பின்னிப் பிணைந்தது. இவரின் மாமனார் திரு.க. தணிகாசலம் அவர்களுக்கு பின் இவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அம்மையாருக்கு உதவிக்கரமாகவும் வலது கரமாகவும் செயற்பட்ட பணியாளர். சரளமாக சிங்களத்தில் பேசும் ஆற்றல் கொண்ட இவர் நாட்டுயுத்த நெருக்கடி காலங்களில் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் முன்பாக நின்று கோயிலின் பெருமைகளை எடுத்துக் கூறிய பெருமைக்குரியவர். எனது குடும்ப அங்கத்தவர் போன்று வாழ்ந்து எங்கள் குடும்பத்தாரின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துவோமாக.

கா. சிவபாலன்

(6949)

# யாத்திரிகர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள்

(கொழும்பு)

சிவனொளிபாதமலையின் யாத்திரை பருவகாலம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இதனைத்தொடர்ந்து யாத்திரிகர்களுக்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதி பணிப்பாளர் சரத்குமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இருந்து விசேட பேருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்தும் அவிஸாவளையில் இருந்தும் பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தொடரூந்தில் வரும் யாத்திரிகர்களுக்காக ஒவ்வொரு தொடரூந்துக்கும் ஏற்ப பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தள்ளார்.

(அ-2)

# சமூக சேவையாளனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

## உயர் திரு சபாபதி குகதாசன்(J.P)

(இயக்குநர்,குகன் கல்வி நிறுவனம்,ஆவரங்கால்)

(ஓய்வு நிலை உப அதிபர், யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்)



அல் என்பது இவர் சேவைக்கு
இல்லவே இல்லை-இதனால்
அல்லல் இவர் வாழ்வில்
இருந்ததே இல்லை

சொலல் வல்லன் இவர் என்றும்
சோர்ந்திருந்ததில்லை - இதனால்
பல்வேறு பதவி நிலை இவரை
சேர்ந்திருந்ததுண்மை

எப் பதவி இவர் பெறினும்
அப்பதவி பெருமையுறும்
செப்புகிறோம் வியப்புடனே
சீராளன் பெருமைதனை

கண்டிப்புடன் கருணை மாணவர்க்கு
கற்பித்தலில் திறமை
எண்டிசையும் பரவும்- நும்
ஏற்றமிகு பெருமை

விழுதுகள் நாம் எழுதுகிறோம்
விருட்சத்தின் பெருமைதனை
தொழுது தினம் வேண்டுகிறோம்-நும்
சேவையின் அருமைதனை

உயர் திரு சபாபதி குகதாசன்(J.P) அவர்கள் 05.12.2011 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி உயர் திரு க.அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு மனம் மகிழ்வதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சமூக சேவையில் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அன்புடன் மாணவன்
B.S. செந்தூரன்.

(6950)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**உத்தரம் 2,3,4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள் வரை**

**இரண்டாமிடத்தில் சனி! இலாபம் குவியும் இனி!**

**சகலகலாவல்லவர்களாக இருந்தாலும், சாதுவைப் போல காட்சியளிக்கும் கன்னி இராசி நேயர்களே!**

நீங்கள் புதனின் ஆதிக்கத்தைப் பெற்றவர்கள். எனவே புத்திசாலித்தனத்திற்கு சொந்தக்காரர்கள். மற்றவர்கள் மனதைப் புரிந்து கொண்டு செயற்படுவதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை.

ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே எடை போடுவதில் பலே கெட்டிக்காரர்களாக நீங்கள் விளங்கினாலும் சில சமயங்களில் ஏமாற்றங்களையும் பெரிய அளவில் சந்தித்து விடுவீர்கள். வாழ்க்கை துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதிகபட்சமான பொருத்தம் இருப்பதோடு திருமண நாள் குறிக்கும் பொழுதும் பொருத்தமான நாளாக அமைந்தால் தான் வருத்தமில்லாத வாழ்க்கை அமையும்.

குறிப்பாக உங்கள் இராசிநாதன் புதன் இருக்கும் சாரபலமறிந்து பரிகாரங்களைச் செய்தால் தொழில் வளம் மேலோங்கும். உங்கள் இராசிநாதன் புதன் நவாம்சத்தில் இருக்கும் நிலையறிந்து, அதைப் பார்க்கும் கிரகத்தையும், அதோடு இணைந்திருக்கும் கிரகத்தையும் சேர்த்து ஆராய்ந்து, அதற்குரிய எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் வாழ்க்கை வளமாக அமையும்.

இப்படிப்பட்ட, குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**இலாபத்தைக் குவிக்குமா?**
**இரண்டா மிடத்துக்கு சனி!**

மார்கழி 5ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை ஜென்ம இராசியில் சஞ்சரித்து சிரமங்களையும், சிக்கல்களையும் கொடுத்திருக்கலாம். சிந்திக்காது செய்த காரியங்களால் மனநிம்மதி குறைந்திருக்கலாம். இனி இந்த நிலைமை மாறி பொருளாதார வளர்ச்சி கூடும்.

இரண்டாமிடம், சனிக்கு உச்ச வீடாகும். எனவே, உச்சம் பெற்ற சனி, இனி ஒப்பற்ற வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். இலட்சம் இலட்சமாக சம்பாதிக்க கூட்டாளிகள் வந்திணைவர். அங்கிருந்து கொண்டு, 4,8,11 ஆகிய இடங்களைப் பார்த்துப் புனிதப்படுத்துகிறார். எனவே, தாய், வாகனம், சுகங்கள், இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு, உடல்நிலை, வியாபாரம், வீடு மாற்றங்கள், பயணங்கள், இளைய சகோதரம் ஆகியவற்றிற்குரிய ஆதிபத்யங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களை வழங்கப் போகிறார்.

இந்த இரண்டாமிடத்துச் சனிப் பெயர்ச்சியால் எல்லாவிதத்திலும் நன்மை கிடைத்தாலும், ஒரு சில வழிகளில் மன அமைதி குறையலாம். குறிப்பாக வாக்கு ஸ்தானம் இரண்டாமிடம் என்பதால், பிறருக்கு வாக்குக் கொடுக்கும் முன் யோசித்துச் செய்வது நல்லது.

இதுபோன்ற காலங்களில் வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது. வாழைப்பழ விளக்கேற்றியும், வெற்றிலை மாலை சூட்டியும் வழிபாடு செய்யலாம்.

**மந்தன் பார்வையால் ஏற்படும்**
**மகத்தான பலன்கள்!**

உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் சனியின் பார்வை 4, 8, 11 ஆகிய இடங்களில் பதிவதால் வீடு வாங்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வேலை போதும் என்று சொல்லி விருப்ப ஓய்வு பெற்று, வீட்டிற்கு வந்து நல்லதோர் தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். வாகன மாற்றம் செய்து மகிழும் நேரமிது. மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். கட்டிய வீட்டை பழுதுபார்ப்பதும், கெட்டிமேளம் கொட்டுவதும் இந்த நேரத்தில்தான்.

எட்டாமிடத்தைச் சனி பார்ப்பதால் ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள், நாடு மாற்றங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் உத்தியோக வாய்ப்பு உருவாகி, வாயில் கதவைத் தட்டும். உச்ச சனியின் பார்வை அஷ்டமத்தில் பதிவது நன்மைதான். ஆறுக்கு அதிபதி எட்டாமிடத்தைப் பார்ப்பதால் விபரீத ராஜயோகம் செயற்படும் அல்லவா? எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**குருப்பெயர்ச்சி காலம்!**

சுமார் 2 1/2 ஆண்டுகள் துலாம் இராசியில் சஞ்சரிக்க வேண்டிய சனி பகவான் கூடுதலாகவே சில மாதங்கள் அந்த இராசியில் சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறவிருக்கிறது. 17.05.2012 இல் இடப இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 28.05.2013 மிதுன

**சாதுவைப் போல காட்சியளித்தாலும்;**
**சகலகலாவல்லவர்களாகத் திகழ்பவர்கள்**

இராசியில் குரு உலாவரப் போகிறார். 13.06.2014 இல் குரு கடக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார்.

இடப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 1,2,5 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே, உடல்நலம் சீராகும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். சகோதர உறவு பலப்படும்.

மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரம் பெருகும், பூமியோகம் கிட்டும். அருளாளர்களின் தொடர்பால் அனைத்து காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்வீர்கள். அதன் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவதால் உத்தியோகத்தில் முன்னேற்றங்கள் வந்து சேரலாம். மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும் நேரமிது. திருமணமானவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும் நேரம் இது.

**இராகு-கேது பெயர்ச்சிக்காலம்!**

02.12.2012 துலாம் இராசியில் இராகுவும், மேட ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும், மீன இராசியில் கேதுவும் உலாவரப் போகிறார்கள்.

முதல் இராகு-கேது பெயர்ச்சி காலத்தில் இரண்டாமிடத்துக் கேதுவால் உங்கள் முன்னேற்றங்கள் பிறர் கண்படும் விதத்தில் அமையும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.அஷ்டமத்தில் கேதுவால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயங்கள் கிடைக்கும். உரிமையோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகினாலும் மீண்டும் வந்து இணைவர்.

அடுத்த இராகு-கேது பெயர்ச்சிக்காலத்தில் எதிர்பார்த்தபடியே இடமாற்றங்கள் உருவாகும். கூட்டாளிகள் விலகுவர். தனித்தியங்கி செயற்பட்டு, தனக்கு நிகர் யாருமில்லை என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். கேதுவின் பலத்தால் குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதும், குழந்தைகளின் நலன் கருதி தங்கம், வெள்ளிகளை வாங்கும் சூழ்நிலையும் உருவாகும்.

**சனியின் வக்ர காலம் பொற்காலமாக**
**மாற!**

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார்.உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையானவற்றில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படலாம். உத்தியோக மாற்றம் திடீரென ஏற்படும். இலாகா மாற்றம், இடமாற்றம் எதிர்பார்த்தபடி அமைய இக்காலத்தில் முறையான பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற நாளில், யோக எண்களின் அடிப்படையில் ஸ்ரீ ராமஜெயம் மாலை கட்டி அனுமனுக்கு அணிவிக்கலாம். நவக்கிரக விநாயகர் படம் மற்றும் சாப விமோசனம் படங்களை பூஜை அறையில் வைத்து வழிபடுவது நல்ல பலன்களைத் தரும்.

**தனவரவில் தடைகளை நீக்குமா**
**இந்தசனி!**

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்போது தனஸ்தானம் எனப்படும் இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இது நல்ல இடம்தான். அதுவும் பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்யும் இடம். பொருளாதாரத்தை வளர்ச்சியடைய வைக்கும் இடத்தில் சனி சஞ்சரித்தால், அதனால் பண பலம் அதிகரிக்குமா, அல்லது குறையுமா என்ற சிந்தனை மேலோங்கியிருக்கலாம்.

உங்கள் இராசிக்கு 5,6 ஆகிய இடத்திற்கு அதிபதியானவர்கள் சனி, பஞ்சமாதிபதி 2 இல் சஞ்சரிக்கும் பொழுது பஞ்சம் இல்லாத வாழ்க்கை அமையும் என்பது நியதி.

தொழில் இலாபத்தை அள்ளி வழங்கி எழிலான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறது இந்தச் சனிப்பெயர்ச்சி. காகத்திற்கு சோறிட்டுக் கனிவான வாழ்க்கையை

**சிவல்புரிசிங்காரம்**

அமைத்துக் கொள்வதோடு, கவசம் பாடி, கைகூப்பி தொழுவதால் நினைத்த காரியமெல்லாம் நிறைவேறும்.

**தொட்ட காரியங்களில் வெற்றிபெற**
**வழிபாடு!**

ஏழரைச்சனியில் ஜென்மச்சனி விலகி குடும்பச் சனி தொடங்கும் நேரமிது. இந்த நேரத்தில் சனிக்கிழமைதோறும் விரதமிருந்து சனி கவசம் பாடி, சந்நிதியில் ஜோடி தீபம் ஏற்றினால் மணியான வாழ்க்கை மலரும். சனியின் சந்நிதியில்,

கலியுகம் தன்னில்
கவலைகள் போக்க,
வழியைக் காட்டும்
வல்லவன் சனியே!
இனிமேல் துயரம் இல்லாதிருக்க,
உனையே துதித்தேன்!
உயர்வினைத் தருக!

என்று பாடி வழிபடுங்கள்.

(தொடரும்)

# தியானம்

## ஆனந்தத்தின் வாசல்



ஆன்மீகம் 07

இன்று உலகிற்குத் தேவையானவர்கள் நல்ல மனிதர்கள் இல்லை. நமக்குத் தேவையானவர்கள் அறிவோடு செயல்படும் மனிதர்கள் தான். 12% என்பது சொல்லிக் கொள்ளத்தக்க வகையில் ஒரு நல்ல சதவீதம் இல்லை அல்லவா? உண்மையில் நாமொரு முட்டாள் தனமான மனிதகுலமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு தேவையானது மிகவும் அறிவோடு வாழும் மக்கள்தான். மதங்களும் சமூகக் குழுக்களும் எப்போதும் நல்ல மனிதர்களை உருவாக்கவே முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல மனிதர்களால் தான் பிரச்சனைகள் உருவாகின்றன. உலகில் இதுவரை நடந்திருக்கும் தீமைகள் எல்லாம் நல்ல மனிதர்களால்தான் செய்யப் பட்டிருக்கின்றன. உங்களுக்குத் தேவைப்படுவது நல்லது அல்ல. உங்களுக்குத் தேவைப்படுவது அறிவோடு செயல்படுவதுதான். அறிவோடு செயல்படும் மனிதர்கள்தான். அது நடக்க வேண்டுமானால் அவர்களது புத்தி சாலித்தனத்தை உபயோகப் படுத்தும் திறமை அவர்களுக்கு உயர வேண்டும். யோகா என்பது அந்தப் பரிணாமத்தில் செயல்படும் ஒரு அற்புதமான கருவி. எனக்கு இது மிக நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல பல மனிதர்களுக்கு இதை அனுபவ ரீதியாகவும் நிரூபித்திருக்கிறோம். இந்தப் பயிற்சியை செய்யுங்கள், மூன்று மாதகாலத்தில் நீங்கள் எப்படி செயல்படுகிறீர்கள் என்பதைப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அனுபவரீதியாக அவர்கள் அதை உணர்ந்தும் இருக்கிறார்கள். தற்போது அறிவியல் ரீதியாக அதை பரிசோதித்துக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் நான் இதை விரும்பவில்லை என்றாலும் மக்களுக்கு இதை உணரச் செய்ய நமக்கும் வேறு வழிகள் இல்லை.

*கேள்வி:* யோகாவின் நான்கு பாதைகளையும் பயிற்றுவிக்கும் மையமாக நான் ஈஷா யோகமையத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த நான்கு பாதைகளும் தியான லிங்கத்தின் ஏழு சக்கரத்திலும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கேட்டிருக்கிறேன். ஒரு பக்தியாளருக்கு இங்கே எப்படிப்பட்ட சாத்தியம் இருக்கிறது.

*சத்குரு:* பக்தியாளர், ஞானத்தில் இருப்பவர், கிரியப்பாதையில் இருப்பவர், கர்மப் பாதையில் இருப்பவர் என்றெல்லாம் யாரும் இல்லை. உணர்ச்சிகளைப் பயன்படுத்தி உங்களது உச்சபட்ச தன்மையை தேடினால், அதற்கு பக்தி என்கிறோம். அதே உச்சபட்ச தன்மையை உங்களுடைய புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி தேடினால், ஞானம் என்கிறோம். உடலைப் பயன்படுத்தி உச்சபட்ச தன்மையை அடைய நினைத்தால் அதற்கு கர்மயோகா என்கிறோம். உங்களுடைய உள்நிலை சக்திகளில் மாற்றம் எடுத்து வருவதன் மூலமாக உச்சநிலையை அடைய நினைத்தால், அதனை கிரியா யோகம் என்கிறோம். எனவே இந்த நான்கு வழிகள் மட்டுமே உள்ளன. ஏனென்றால் இந்த நான்கு மட்டுமே உங்களைப் பொறுத்தவரை நிதர்சன உண்மைகள். மற்றவையெல்லாம் உங்கள் கற்பனைதான்.

உங்களுடைய கடவுள், உங்களுடைய கருத்துக்கள், உங்களுடைய அபிப்பிராயங்கள் உங்களுடைய சாத்தான் இவையெல்லாமே வேறு யாரோ உங்களுக்குச் சொல்லித் தந்தவை. உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் உங்கள் உடல், மனம், உணர்ச்சிகள் மற்றும் சக்திகள் மட்டுமே. நீங்கள் எங்கே சென்றடைவதாக இருந்தாலும் இந்த நான்கை மட்டுமே பயன்படுத்தி சென்றடைய முடியும். ஞானம், பக்தி, கர்மா, கிரியா என்றால் தலை, இதயம், கைகள் மற்றும் சக்தி இந்த உலகில் யாரேனும் தலை மட்டும் இருந்து இதயமோ, கைகளோ இல்லாமல் இருக்கிறார்களா? அல்லது யாரோ ஒருவருக்கு இதயம் மட்டும் இருக்கிறது மற்றவை இல்லையென்று சொல்ல முடியுமா? இந்த நான்கும் சேர்ந்த கலவைதான் நீங்கள். யாரோ ஒரு மனிதருக்கு அவருடைய தலையில் ஆதிக்கம் அதிகமாய் இருக்கலாம். மற்றொருவருக்கு. அவருடைய இதயம் ஆதிக்கமாய் இருக்கலாம். இன்னொருவருக்கு அவரது கைகள் ஆதிக்கமாய் இருக்கலாம். ஏதோ ஒன்றோடு மட்டும் யாரும் இல்லை. எனவே இந்த நான்கும் சேர்ந்த கலவை இல்லாவிட்டால், அந்த மனிதனுடைய வளர்ச்சி சரியானதாக இருக்காது. நாம் செய்வது என்னவென்றால் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவருக்கு ஏற்ற கலவையைக்கலந்து தருகிறோம். ஒரு மனிதர் முழுவதும் செயலில் ஈடுபாடு உடையவராக இருப்பார். அவரிடம் நீங்கள் கண்ணை மூடி அமரச் சொன்னால் அவருக்குப் பைத்தியமே பிடித்து விடும். எனவே ஒவ்வொரு மனிதரும் வெவ்வேறு விதமான ஆதிக்கத்தில் இருக்கிறார்கள். அதற்கு ஏற்ற கலவையை அவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும். அதனால் தான் இந்தக் கலாசாரத்தில் வாழ்கின்ற குருவின் முக்கியத்துவம் அதிகமாக வலியுறுத்துப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், அவர் மிகச் சரியான கலவையை உங்களுக்குத் தருகின்றார். தவறானவற்றைத் தந்தால் அது உங்களுக்கு வேலை செய்யாது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# முஸ்லிம்களின் ஆடற்கலைகளில் களிகம்பு

03



"களிகம்புப் பாடல்கள்"

களிகம்பு ஆட்டத்தில் அதிகமாக இஸ்லாமிய இலக்கிய நூல்களில் உள்ள சரித்திரம் சம்பந்தமான பாடல்களே பெரிதும் பாடப் படகின்றது. அலிபாதுஷா நாடகம், அப்பாஸ்நாடகம், குறமாது, பயகாம்பர், அவதாரப் பலவர்ணச் சிந்து, கப்பற் பாட்டு, மஃஷுக்கு மாலை, காஷிம் படைப்போர் ஆகியவை களிகம்புப் பாடல்களில் பிரசித்தமானவை. இதுதவிர புயல்காவியம், பெருவெள்ளக் காவியம், மீன் புழுக்காவியம் ஆகியவைகளுடன் சமகாலத்தில் நடைபெறும் சம்பவங்களை வைத்து எழுதப்படும் பாடல்களும் பாடுவதுண்டு.

கடந்த அறுபது வருடங்களுக்கு முன்னதாக காத்தான் குடியில் களிகம்பு ஆட்டக்குழுவினை வைத்து நடத்திய அண்ணாவிமார்களுள் தேன் பாணியர் என்று செல்லமாக அழைக்கப்பட்டு வந்த அகமது லெவ்வை அண்ணாவியார் ஒருவர். இவர் சமகால சம்பவங்களை வைத்து அவ்வப்போது பல கோலாட்டப் பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பல பாடல்கள் இன்னும் அழியாமல் உயிர் வாழ்கின்றன. அவற்றுள் பாலப்பாட்டும் கோச்சுப்பாட்டும் முக்கியமானது.

1931 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் கல்லடிப்பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தவேளை காத்தான் குடியிலிருந்து இரவு நேரங்களில் பலர் நடந்து சென்று பாலம் கட்டப்படுவதைப் பார்த்து வருவர். இதனைக் கருவாகக் கொண்டு களிகோலாட்டத்திற்கு இயற்றிய பாடல் இது.

1.பாலம் பார்க்கப்போவோம்
வாருமே!- என்
பாவையரே பெண்ணே
பாலம்பார்க்கப்போவோம்
வாருமே!
பாலம் பார்க்கப் போவோம் வாரும்
பாவையரே சேர்ந்து நாமள்
கால்நடையாய் போனோம் என்டா
காணலாமே காட்சிகள் எல்லாம்

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

பெட்டகத்தைத் திறந்து பொன்
வெள்ளிச்சாமானை
பொற்கொடியே நீயும் போடு
வாட்டி மறிச்ச வடக்கத்திச்
சோமனை
வண்ணக் கிளியே கொசுவி உடு
சாரிக்கு ஏத்த சயிசான சட்டையை
சட்டென எடுத்துப்போடு
முகத்தையும் மூடி
நீ மொக்காட்டைப் போட்டுக்க
முன்னால போறன் நான்
பின்னால வா பெண்ணே

இப்பாடல் ஓர் வழிநடைச் சிந்தாகும். காத்தான்குடியிலிருந்து புறப்பட்ட தம்பதிகள் மட்டக்களப்பு வரை நடந்து சென்று திரும்பி வரும் வரை கண்ட புதுமைகளை எடுத்துக் கூறுகின்றது. மற்றது கோச்சுப்பாட்டு எனும் ரெயில்பாட்டு மட்டக்ளப்பு புகையிரதம் ஓடவிடுவதற்காக பாதை அமைத்துப் புகையிரதம் ஓடிவருவது வரையுள்ள விடயங்கள்ளை உள்ளடக்கி அதனை ஒரு கருவாகக் கொண்டு அண்ணாவியார் இப்படிப் பாடுவார்.

2. ஆதியருளல் என்னாவில் பிழை
யானதொரு குற்றம் வராமல்
பாருலகில் ரெயில் பாட்டதை
பாடிடப்
பாத்திபனே வந்து காத்தருள்வாய்

தன்னன்ன தானினம் தன்னானாத்
தன
தான தானினம் தன்னானா
தன்னன்ன தானினம் தன்னானாத்
தன
தானதானினம் தன்னானா
கானகத்தில் பல இங்கிலீசர் கூடிக்
காட்டு ரெயில் தன்னை ஓட்டு
தற்கு
தானமே தானமே றோட்டுக்ள்
போட்டிடும்
சங்கதியைக் கொஞ்சம்
சொல்லுகிறேன்

கல்லு மலைகளைத் தானுடைத்த
அந்த
காடு செடிகளைத்தான் பிடுங்கி
உச்ச மலையில் சுரங்கமிட்டு
வெகு
ஓடர்கள் போடுகிறார் தாய்மாரே!

கட்டுக்கடங்காத மட்டக்களப்
பென்னும்
காரிளைக் கோறளப்பற்று
தன்னை
எட்டிப்பிடுங்க மனந் துணிந்து
கொண்டு
ஏகிப்பறக்குதொரு கோச்சி

அதிகமாக இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்கிய பாடல்களும் சமகாலச் சம்பவங்கள் சம்பந்தமான பாடல்களும் பாடப் படுவதால் ஒரேநேரத்தில் ஆட்டத்தைக்கண்டு ரசிக்கவும் சரத்திர சம்பவங்களைக் கேட்டுச் சுவைக்கவும் கூடியதாக உள்ளது. ஆகையினால் தமது பகுதிகளில் களிகம்பு ஆட்டத்தைப் பார்த்து இரசிப்பதற்கு ஆண்களைவிட பெண்களே அதிகமாக வருவதைக்காணலாம்.

(தொடரும்)

பாவலர் சாந்தி முஹியித்தீன்

# கூட்டமைப்பின் தீர்வு திட்டத்தை அரசு ஏற்காவிடில் சர்வதேசத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை

## கிழக்கு மாகாண உறுப்பினர் இரா.துரைரெட்ணம்

தமிழ் மக்களின் நலன்சார்ந்த அரசியல் கட்சிகள் அரசுக்கு முட்டுகொடுக்கும் வேலையும் கிழக்கு பிரிவினைவாதத்தையும் பேசிக் கொண்டிராமல் நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்வு திட்டத்தை பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் தமிழ் தேசம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக சர்வதேசம் தலையிடுவது தொடர்பாகவும் தலையிடாமல் இருக்க வேண்டுமாயின் இலங்கை அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று அரசாட்சி செய்துகொண்டு தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் என சொல்வதும் திம்பு பேச்சுவார்த்தைபோல் என்று கூறுவதை நிறுத்திவிட்டு 89 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டதும் தமிழ்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டதும் தற்சமயம் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் முன் வைக்கப்பட்டதுமான வடகிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும். அத்தோடு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அந்த மக்களோடு பேசி தீர்வு காண வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் தமிழ் உரிமைகள் மறுக்கப்பட்டதை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்தாலேயே தமிழ் மக்களிடையே தனிநாட்டு சிந்தனை பிறந்தது.

இதன் பின்புலத்தில் இதற்காக நாம் கொடுத்த விலைகள் எண்ணவற்றவை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினை உரிமைகள் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் தமது இனத்தின் பெருமையை பெறுவதற்காக ஏதொருவகையில் ஒவ்வொருவரும் பங்காற்றி உள்ளனர்.

குறிப்பாக இப்போராட்டத்திற்கு போராளிகள் தொடக்கம் பொருளாதாரம் வரையில் ஜனநாயக ரீதியாக இப்போராட்டத்தை வளர்த்து செல்ல ஒவ்வொவரும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அதனை மறுப்பதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

எமது நாட்டில் 3 தசாப்தமாக நீடித்த போரும் உட்பூசல்களும் முரண்பாடுகளும் விரும்பியோ விரும்பாமலோ இலங்கை தீவின் அனைத்து இன மக்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இதனை எந்த இதய சுத்தியுள்ள மனிதர்களும் மறுதலிக்க முடியாது.

எனவே உலக நாடுகளின் தலையீட்டை தவிப்பதற்கும் சர்வதேச நெருக்கடியிலிருந்து தான் எதிர்நோக்கியுள்ள சவால்களை அகற்றவும் உலக தமிழர்களின் இன்றைய இலங்கை அரசு தொடர்பான சந்தேகப்பார்வையை இல்லாது செய்யவும் உண்மையில் தனது சிந்தனையை நிறுத்திவிட்டு தனது ஆட்சி அதிகாரத்தை ஸ்திரப்படுத்தவும் வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய நிரந்தர தீர்வை வழங்கி எல்லோரையும் ஒரே குடையின் கீழ் அரவணைத்துக் கொள்ள வேண்டும். (அ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து சமய பொது அறிவுப் போட்டி அறநெறி பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத் தப்பட்டது. இப்போட்டியில் மாவட்ட தேசிய மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பரிசுபெற்ற மாணவர்களது பெயர் விபரங்கள் உரிய அறநெறிப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்வும் பரிசு பெற்ற மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# பொன்சேகா விடயத்தை ஐ.நா.வில் முறையிடுவோம்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்யப்படும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் பத்து இலட்சம் கையொப்பங்களை திரட்டும் போராட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது.

மேல் நீதிமன்றில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டுமா என்பது தெரியவில்லை. எனவே இந்தப் பிரச்சினை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்யப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதுவே எமது பிரதான நீதிமன்றம். அதில் முறைப்பாடு செய்யப்படும் என்று அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் போது அரசாங்கம் குற்றவாளிக் கூண்டில் நிற்க நேரிடும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆரம்பமாகியுள்ள கையொப்பம் திரட்டும் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# கட்டார் பிரதமர் உள்ளிட்ட குழு இலங்கை விஜயம்

கட்டார் பிரதமர் ஷெய்க் ஹமாட் அல்தானி உள்ளிட்ட குழுவினர் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளனர்.

கட்டார் தூதுக்குழுவினரை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இருநாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேலும் வலுப்பெறச் செய்யும் வகையில் அவ்விஜயம் அமையும் என நம்பப்படுகின்றது.

இலங்கை வரும் கட்டார் பிரதமர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# டெங்கு நோயாளர்களை பராமரிப்பது தொடர்பில் பாக்.வைத்தியர்களின் பயிற்சி

பாகிஸ்தானிலிருந்து இலங்கை வந்துள்ள 60 பேர் கொண்ட வைத்தியக் குழு டெங்கு நோயால் பாதிக்கப்படும் நோயாளர்களை எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றிய பயிற்சிகளை இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கின்றது.

ஒரு கிழமைக்கு நடைபெறும் இப்பயிற்சியில் நோய் தடுப்பு முறை பற்றியும் வைத்தியசாலை பயிற்சிகளும் இடம்பெறும்.

நோய்த்தடுப்பு பிரிவினரால் நடத்தப்படும் இப்பயிற்சி தேசிய வைத்தியசாலைகளிலும் சிறுவர் வைத்தியசாலையிலும் நடைபெறும்.

பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் பரவிய டெங்கு நோய் காரணமாக செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானிய அரசின் கோரிக்கையால் இலங்கையிலிருந்து 2 வைத்திய குழுக்கள் அங்கு அனுப்பப்பட்டன. நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் தொட்டிகளிலும் டெங்கு நுளம்பு வளர்வதாக தவறாக எண்ணப்பட்டதால் டெங்குநோய் கட்டுக்கடங்காமல் பாகிஸ்தானில் பரவியது.

தண்ணீர் தேங்கும் சிறு இடங்களிலேயே டெங்கு நுளம்புகள் வளர்வதாக எமது குழு எடுத்து காட்டியதன் காரணமாக டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (அ-2)

# ரணில் தலைவராக இருக்கும்வரை இன்றைய அரசின் ஆட்சி நிலைக்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்குமவரை மாத்திரமே தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி நிலைக்கும் என ஐக்கிய தேசியக்கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

கருஜயசூரிய 17பேரை அழைத்துக்கொண்டு அரசுடன் இணைந்துகொண்டமை தொடர்பில் சிலர் கூறும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இதுவரை 63 ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொண்டுள்ளதாக மைத்திரி சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகி சிரேஷ்ட தலைவராகக் கடமையாற்றவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)



பீப்பிள்ஸ் லீசிங் கம்பனிக்கு சொந்தமான பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் கம்பனியானது வாகனவிபத்துக்கான முழுக் காப்புறுதி தொகையினை தனது வாடிக்கையாளரான சிவராசா சிவபரன் என்பவருக்கு அண்மையில் வழங்கியது. இத் தொகையினை பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா வழங்குவதனையும் அருகில் சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகளான காண்டீபன் மற்றும் கமல் நிற்பதனையும் நடுவில் பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் பொறுப்பதிகாரி என். சுபான்சனையும் படத்தில் காணலாம்

# இந்தோனேசியாவில் இருந்து ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது இந்தோனேசியவிஜயத்தைநிறைவுசெய்துகொண்டு நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.

பாலித் தீவில் இடம்பெற்ற 4 ஆவது பாலி ஜனநாயகவாதிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி அங்கு சென்றிருந்தார்.

இம்மாநாட்டில் மாறிவரும் உலகில் ஜனநாயகத்தின் பங்களிப்பை அதிகரித்தல் என்ற தொனிப்பொருளில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது இந்தோனேசிய ஜனாதிபதி சுகிலோ யுதானோவை சந்தித்து பேசினார்.

அத்துடன் கட்டார் பிரதமர் மற்றும் புருனியின் சுல்தான் ஆகியோரையும் சந்தித்து பேசி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கட்சியின் தலைமைப்பதவி கருவுக்கு வழங்கப்பட வேண்டும்

## ஐ.தே.க. கிளர்ச்சிக்குழு தெரிவிப்பு

எதிர்க்கட்சியின் தலைமைப் பொறுப்பும் கரு ஜயசூரியுவுக்கே வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சித் தலைமைக்கான வாக்கெடுப்பில் கருஜயசூரிய வெற்றியீட்டும் பட்சத்தில் எதிர்க் கட்சி தலைமைப்பொறுப்பையும் அவருக்கு வழங்க வேண்டுமென கிளர்ச்சிக்குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.

கட்சித் தலைமைப்பொறுப்பை கருஜய சூரியவுக்கு வழங்கி எதிர்க்கட்சி தலைமைப் பொறுப்பை ரணிலிடமே விட்டு விடுவது என்று கிளர்ச்சிக்குழுவினர் தீர்மானித்திருந் தனர்.

எனினும் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுப் பதனால் தமது தீர்மானத்தை மாற்றிக் கொண் டதாக பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான குழுவினர் அறிவித் துள் ளனர். (அ-2)

# இராணுவ வரலாற்றுப்புத்தகத்திலிருந்து சரத் பொன்சேகாவின் பெயர் நீக்கம்

## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன் சேகாவின் பெயர் இலங்கை இராணுவ வர லாற்றில் இருந்தும் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் எதிர்வரும் காலத்தில் முன்னாள் இராணுவத்தளபதி என்ற பதவி நிலைக்குள் உள்ளடங்கமாட்டார் என இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் போது சரத் பொன்சேகா மேற் கொண்ட நடவடிக்கைகளும் கருத்திற்கொள் ளப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

கடந்த ஆண்டு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து இது நடைமு றைக்கு வந்துள்ளதாக பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

இதன்படி இலங்கையின் முன்னாள் இரா ணுவத்தளபதிகளாக 1952 ஆம் ஆண்டில் இருந்த பிரிகேடியர் சின்கிலேயர் 1955 இல் இருந்த பிரிகேடியர் எப்.எஸ்.ரெய்ட், 1959 இல் இருந்த மேஜர் ஜெனரல் ஏ.எம்.முத்துகுமாரு, 2000 ஆம் ஆண்டில் இருந்த லெப்டினனட் ஜெனரல் வீரசூரிய, 2004 ஆம் ஆண்டில் இருந்த லெப்டினனட் ஜெனரல் லயன்ல் பல கல்ல, 2005 ஆம் ஆண்டில் இருந்த ஜென ரல் கொட்டேகொட ஆகியோரின் பெயர்களே எதிர்வரும் காலங்களில் நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தனியார் ஊடகங்கள் சரத் பொன்சேகாவை முன்னாள் இராணுவத் தளபதி என்று அழைக்கின்றபோதும் அவற றுக்கு அதனை மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவித்தல் எதனையும் விடுக்கப் போவதில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தமது தந்தையின் விடு தலைக்காக அமெரிக்க அரசாங்கத்தை வலி யுறுத்தும் வகையில் 25 ஆயிரம் கையொ ப்பங்களை திரட்டும் நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருவதாக சரத் பொன்சேகாவின் மகள் அபர்ணா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் இந்த கையொப்பங்கள் அமெரிக்க அரசாங் கத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றும் அபர்ணா குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# தமிழ்மொழியில் கடமையாற்ற 350 பொலிஸார் இணைப்பு

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமை யில் ஈடுபடுத்தும் நோக்கில் புதிய உத்தியோகத் தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழியில் கடமையாற்றக்கூடிய சுமார் 350 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்காக இவ் வாறு 350 பேர் இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


தமிழ்,சிங்கள மற்றும் முஸ்லிம்கள் குறி த்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனி னும் அடிப்படைத் தகுதியாக தமிழ் மொழி யறிவு கருதப்படும்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது தாய் மொழியில் கருமமாற்றுவதனை உறுதி செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்தத் தீர் மானத்தை ,எடுத்துள்ளது என அவர் குறிப் பிட்டுள்ளார்.

(அ-2)

# போரியல் வாழ்விலிருந்து விடுபட்டு சிறந்த எதிர்காலத்தை அமைப்போம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

தனித்துவமான எமது பண்பாட்டையும் கலாசார விழுமியங்களையும் பாதுகாக்கும் தற்துணிவும் பொறுப் புணர்வும் எமக்கு வேண்டும். எனவே, அதைப் பாதுகாக்க முனைபவர்களை நாம் பாராட்டுகின்றோம். அத்தோடு கடந்த கால போரியல் வாழ்விலிருந்து விடுபட்டு தமது எதிர்காலத்தை சுபீட்சமானதாக அமைக்க வேண்டும் என்ற இளம் தலைமுறையினரின் சிந்தனையும் போற் றுதற்குரியது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மண்ணுக்குரிய கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் தற்துணிவும் பொறுப் புணர்வும் எம்மிடம் இருக்கும் வரை மாறுபட்ட பண்பாடும் கலாசாரமும் எமது பாரம்பரிய பண்பாட்டை பாதுகாப்பதற்கு தடையாக அமையப் போவதில்லை. எனவே, இன்றைய இளம் தலைமுறையினர் இவ்விடயத்தில் தெளிவான சிந்தனையுடையவர்களாக செயற்பட வேண்டும்.

இன்றைய இறுக்கமான வாழ்க்கை ஓட்டத்திலும் எமது கலாசாரத்தை பாதுகாக்க முனையும் அவர்களின் செற்றிறனை நாம் வரவேற்கின்றோம். அத்தோடு கடந்த கால போரின் கொடூரம் எமது இளம் சமூகத்தினரை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்த சரியான சிந்தனைப் போக்கினை நாம் வரவேற்கின்றோம். அவர்களின் எதிர் பார்ப்பை நிறைவேற்ற நாம் மிகுந்த கரிசனையோடுள்ளோம். எனவே, எமது சமூகம் மீண்டும் தமது வாழ்வியல் முன்னேற்றத்தினை நோக்கி பயணிக்க தயாராகின்ற இந்தச் செய்தியானது நாம் முன்னெடுத்து வரும் அபிவிருத்திப் பணிக்கு மேலும் உத்வேகமூட்டுகின்றது. (அ-2)

# வடக்குக்கிழக்கை இணைப்பதற்கு பதிலாக வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த ஆணைக்குழு

## ஆராய்வதாக அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப் பதைத் தவிர்த்து அதற்குப் பதிலாக வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதன்பிரகாரம் மத்திய அரசாங்கத்தை யும் மாகாணசபைகளையும் இணைக்கும் வகையிலான ஒன்றிணைந்த ஆணைக்குழு ஒன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத் தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த ஆணைக்குழுவின் ஊடாக மத்திய அரசாங்கமும் வடக்கு கிழக்கு மாகாணசபை களும் காணி அதிகாரத்தை பகிரக்கூடிய சாத்தியம் ஏற்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கு முழுமையான பொலிஸ் அதிகாரங்களை வழங்காது ஓரளவு அதிகாரங்களை வழங்கக்கூடிய சாத்தி யம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இது தொடர் பான யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட வுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கை மீள இணைக்க முடி யாமைக்கு நாட்டின் பெரும்பான்மை மக் களின் விருப்பதிற்கு அமைய நீதிமன்றினால் வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டமையே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)






றோயல் முன்பள்ளியின் ஆரம்பக் கல்வியினை கற்று தரம் 1 இற்கு செல்லும் மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சிவஸ்ரீ இலட்சுமி காந்தக்குருக்கள் மாணவர் ஒருவருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதனையும் றோயல் முன்பள்ளி முதல்வர் க.அருள்செல்வன், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றிய பிரதித் தலைவர் திருமதி அ.அனுஷா, முன்பள்ளி ஆசிரியர்களுடன் பாடசாலை செல்லவுள்ள மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வட்டக்கச்சி செய்தியாளர்)

# அமெரிக்க இராணுவம் காலெடுத்து வைக்குமா?

அமைச்சரவை கடந்த வாரம் கூடிய போது சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவினால் சமர்ப்பிக்கப் பட்ட பிரேரணை ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தியது. அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் உதவியு டன் வடக்கில் உள்ள நான்கு மருத்துவ மனைகளைத் புனரமைக்கும் திட்டமே அது.

ஒட்டுசுட்டான், முழங்காவில், பூநகரி மற்றும் பளை ஆகிய இடங் களில் உள்ள, போரினால் சேதம டைந்த மருத்துவமனைகளை புனர மைப்பதற்கு பசுபிக் கட்டளைப்பீடம் 190 மில்லியன் ரூபாவை வழங்கியது.

இந்த நிதியுடன் உள்ளூர் நிதி 23 மில்லியன் ரூபாவையும் சேர்த்து இந்த நான்கு மருத்துவமனைகளையும் புனரமைப்புச் செய்ய அமைச்சரவை யின் அனுமதி கோரினார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

ஆனால், அந்தத் திட்டத்துக்கு உடன டியாகவே அமைச்சர் விமல்வீரவன்ச விடம் இருந்து எதிர்ப்பு எழுந்தது. காரணம் இது அமெரிக்காவின் இரா ணுவத் தலையீட்டுக்கான முதல் அடி என்பதே அவரது உறுதியான கருத்தாக இருந்தது.

மருத்துவ மனைகளைப் புனர மைப்பு என்ற பெயரில் முதலில் கால் வைப்பதும் பின்னர் இராணுவரீதியாக தலையிடுவதும்தான் அமெரிக்காவின் வழக்கம். உலகில் இது போல பல நாடுகளில் நிகழ்ந்துள்ளது என்று அவர் தனது அச்சத்தை வெளிப்படுத் தியுள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு இந்தச் சந்தேகம் வந்ததற்கு இரண்டு கார ணங்கள் இருந்தன. அமெரிக்கா இந்த நிதி உதவியை வழக்கமான முறை களில் வழங்காதது முதலாவது கார ணம்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக் களத்தின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் மூலமே இந்த நிதியுதவி வழங்கப்படு கிறது.

வழக்கமாக அமெரிக்கா இவ்வா றான நிதியுதவிகளை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முக வரகம் மூலமே மேற்கொள்வதுண்டு. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூத ரகத்தில் இதற்கென சிறப்புப் பிரிவு ஒன்றும் உள்ளது.

ஆனால், பசுபிக் கட்டளைப்பீடம் நிதியை வழங்கியது-சர்வதேச அபி விருத்திக்கான அமெரிக்க முகவ



## சுகாதார அமைச்சரின் பிரேரணையால் அமைச்சரவையில் ஏற்பட்ட சர்ச்சை....

ரகமே இந்தத் திட்டத்தை நிறை வேற்றியுள்ளது.

இங்கே தான் விமல் வீரவன்ச சந்தேகம் கொண்டதற்கான இரண் டாவது காரணம் பிறந்தது. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முக வரகத்தில் பசுபிக் கட்டளைப் பீடத் தைச் சேர்ந்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சிலரும் பணியாற்று கின்றனர். அவர்கள்தான் இந்தப் பணியைக் கவனிக்கவுள்ளதாகக் கூறப்பட்டிருந்தது.

ஆக, பசுபிக்கட்டளைப் பீடம் நிதியையும் வழங்கி நேரடியாக அந்தக் கட்டுமானப் பணிகளையும் கவனிப் பது தான் இந்த யோசனை.

இது விமல் வீரவன்சவுக்கு அமெரிக் கப் படையினர் இங்கு கால் வைக்கத் திட்டமிடுகின்றனரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது.

அமெரிக்கப்படையினர் இனிமேல் வந்துதான் கால் வைக்கவேண்டும் என்றில்லை. அவர்கள் ஏற்கனவே வைத்துள்ள காலைத்தான் சிறிது அகட்டி வைக்கப்போகின்றனர்.

அமெரிக்கத் தூதரகத்தில் அமெரிக் கப்படையினர் சிலர் உள்ளனர். அது போலவே அனைத்துலக அபிவிருத்தி கான அமெரிக்க முகவரகத்திலும் சில அதிகாரிகள் உள்ளனர்.

சிவில் பணிகளையே செய்யும் அவர்கள் அவ்வப்போது தமது வேலை களையும் கவனித்துக் கொண்டுதான் இருப்பார்கள். விமல்வீரவன்சவுக்கு இது தெரியாமல் போயிருக்காவிட்டாலும், அவருக்கு இம்முறை சிறிது அதிக மாகவே அச்சம் வந்துவிட்டது. இப் படியே சிறிதுசிறிதாக அமெரிக்கா இராணுவரீதியாக கால்வைத்து விடுமோ என்று அவர் அஞ்சுகிறார்.

இது அவருக்கு மட்டுமல்ல, சிங்கள தேசியவாத அமைப்புகளுக்கும் இதே அச்சம் இருக்கத்தான் செய்கிறது.

இதனால் தான் அவை மருத்துவ மனைகளை புனரமைக்க அமெரிக்கப் படையினர் இங்கே கால்வைக்கக் கூடாது என்று எச்சரித்துள்ளன.

இந்த விவகாரம் அமைச்சரவைக் குள் முற்றிய போது அதைதீர்க்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை யிட வேண்டியிருந்தது.

அவர் அமெரிக்காவின் இந்தத் தலையீட்டை விரும்பினாலும் சரி, விரும்பாது போனாலும் இந்தத் திட்டத்துக்கு அனுமதியளிக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்.

ஏனென்றால் அதற்குச் சில காரணங் கள் உள்ளன. அதை அவர் அமைச்சர வையில் கூறியும் இருக்கிறார்.

ஏற்கனவே சீனாவும் இந்தியாவும் தமது ஆட்களை வைத்து இலங்கையில் அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுக வேலைகளிலும், நுரைச்சோலை அனல் மின் நிலையப்பணிகளிலும், தெற்கில் நெடுஞ்சாலைப் பணிகளிலும் சீனர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் தெற்கில் ரயில் பாதை புனரமைப்பு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகளில் இந்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்கா தனது படையினரைக் கொண்டுவந்து இது போன்று பணியில் ஈடுபடுத்த விரும்பி னால் இலங்கை அரசினால் அதற்குத் தடை விதிக்கமுடியாது.

ஏனென்றால் சீனர்களும் இந்தியர் களும் இருக்கும் போது அமெரிக்கர் களால் ஏன் அதைச் செய்ய முடியாது என்ற கேள்வி எழும். அது அரசுக்கு சிக்கலானதொரு விவகாரமாகும்.

இன்னொரு பிரச்சினை என்ன வென்றால் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்துடன் இலங்கைக்கு இருந்து வருகின்ற நல்லுறவுதான்.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக் களம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு ஆதரவு வழங்கி உதவியது.

இராஜாங்கத் திணைக்களம்தான் பிரச்சினைகளைக் கிளப்பியது என்ற ஒரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார் ஜனாதிபதி. இது ஒரு வகையில் உண்மைதான்.

போரின்போது அமெரிக்கா இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது உண்மை. ஒருபக்கத்தில் புலிகளை அழிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தது. மற்றொருபக்கத்தில் புலிகளைக் காப் பாற்ற உதவுவது போன்றும் நடித்தது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம்கூட மனித உரிமைமீறல் விவகாரங் களில் கண்டிப்பை காட்டினாலும் புலி கள் விடயத்தில் அது தயவு காட்ட வில்லை.

அதேவேளை அமெரிக்க இராஜாங் கத் திணைக்களத்திற்கும் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் இடையில் இரு வேறுமுகங்கள் இருப்பதாகவோ, ஒன் றினது கொள்கை ஒன்றுக்கு ஒத்துவராது என்றோ கருதும் வகையில் ஜனாதிபதி கூறியுள்ள நியாயம் பொருத்தமானது அல்ல.

அதேவேளை இப்போது அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் இருக்கின்ற முறுகல் நிலையை வைத்துக் கொண்டு பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவியை தடுக்கவோ மறுக்கவோ முடி யாது.

என்னதான் முரண்பாடுகள் பிரச்சி னைகள் இருந்தாலும் பசுபிக் கட்ட ளைப் பீடம் இலங்கையுடன் நெருக்க மான உறவுகளை வைத்துக்கொண்டே இருக்கிறது.

அண்மையில்கூட பசுபிக் கட்டளைப் பீடத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவர் கொழும்பு வந்து பாதுகாப்பு துறை சார்ந்த அனைவரையும் சந்தித்துப் பேசிவிட்டு சென்றிருந்தார்.

இந்த நல்லுறவை சிறு உரசலுக்காக இழந்துவிட முடியாது என்பது ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்து.

அமெரரிக்காவின் நகர்வுகள் இலங் கைக்கு அச்சம் ஊட்டுவதாக இருந்தா லும்கூட இதற்கு மறுப்பு தெரிவிக்க முடியாத நிலை உள்ளது.

பசுபிக்கட்டளைப்பீடம் ஒன்றும் சாதாரணமானதொன்றல்ல அது புவியின் அரைப்பகுதிக்கும் அதிகமான பிரதே சத்தை கண்காணிக்கும் மிகப்பெரிய தொருபடை அமைப்பு.

அமெரிக்கப் பாதுகாப்பு திணைக் களத்தில் 7 கட்டளைப் பீடங்கள் உள்ளன. இவற்றில் மிகப்பெரியதுதான் பசுபிக் கட்டளைப்பீடம். 37 நாடுகள் 30 பிராந்தியங்களை உள்ளடக்கிய இந்தக் கட்டளைப்பீடத்துக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் உலக சனத்தொகையில் 60 வீதத்திற்கும் அதிகமானோர் வசிக் கின்றனர்.

இந்தியாவின் மேற்கு எல்லையில் தொடங்கி அவுஸ்திரேலியா, நியூஸ் லாந்து, மடகஸ்கார், ஹவாய் வரை இதன் எல்லை பரந்து விரிந்துள்ளது. இதன் தலைமையகம் ஹவாய் தீவில் உள்ளது. கொரிய மற்றும் வியட்நாம் போர் நடத்தியதும் இந்தக்கட்டளைப் பீடமே.

உலகின் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கட்டளைப்பீடத்தின் உத வியை மறத்து ஒதுக்குவது எதிர்காலத் தில் கிடைக்கக்கூடிய இராணுவ உதவி கள் மற்றும் உதவிகளை இழப்பதற்குச் சமம். இதனால்தான் எதைப்பற்றியும் யோசிக்காமல் அரசாங்கம் இந்த உதவியை ஏற்றுக்கொண்டது.

அமெரிக்காவை பொறுத்தவரை இப்போது பசுபிக்கட்டளைப் பீடத்தை முக்கியத்துவப்படுத்தியே நகர்வுகளை மேற்கொள்கிறது. இதன் ஒரு கட்ட மாகவே சீனாவுக்கு போட்டியாக அவுஸ்திரேலியாவை பலப்படுத்தி வருகிறது.

இந்த் கட்டத்தில் இலங்கையும் அமெரிக்காவுக்கு மிகவும் தேவை யானதொரு புள்ளிதான். இலங்கையை சீனா எந்தவகையில் பயன்படுத்திக் கொள்ள முனைகிறதோ அதேபோல அதற்கு மற்றுப்புள்ளி வைப்பதற்கு அமெரிக்காவும் முனைகிறது.

இங்கேதான் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் முட்டி மோத முனைகின்றன.



அமெரிக்காவை பொறுத்தவரை யில் இலங்கையில் நிரந்தரமாக கால் ஊன்றும் நோக்கம் ஏதும் இப்போது கிடையாது. இலங்கையில் தளம் அமைக்க அமெரிக்கா முனைவதாக ஒரு கருத்து நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. அது ஜே.ஆர் காலத்து உறவுகளின் மூலம் தொடங்கிய வதந்தி.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது, பசுபிக்கட்டளைப் பீடத்திலிருந்து அமெரிக்கப் படைகள் உதவிக்காக வந்திறங்கிய போதும் இனிமேல் அவர்கள் வெளியேறுவதற்கு வாய்ப் பில்லை என்றே கூறப்பட்டது.

ஆனால், வந்த வேலை முடிந்ததும் அமெரிக்கப்படைகள் புறப்பட்டு போய்விட்டன. இப்போதுகூட இலங் கையில் தளம் அமைக்க வேண்டிய அவசியம் ஒன்றும் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுவிடவில்லை.

ஆனால், இலங்கையை தனது கண் காணிப்பிற்குள் வைத்துக்கொள்வதும் சீனா தளமாகப் பயன்படுத்துவதை தடுப்பதும் அமெரிக்காவின் நோக்கங் களாகும்.

விமல்வீரவன்சவோ, சிங்கள தேசியவாத சக்திகளோ அமெரிக்கா குறித்து மிகையான எச்சரிக்கைகளை விடுத்து அச்சம் கொள்ளவைக்க முயன் றாலும் அந்தளவுக்கு நிலமை ஒன்றும் மோசமாகி விடவில்லை.

இந்த கட்டத்தில் அமெரிக்காவுடன் முரண்பட முனைவதுதான் ஆபத் தானது என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு விமல் வீரவன்ச புரிந்து கொள்ளவில்லை.

அமெரிக்கா, சம்மதத்தோடு கால் வைப்பது ஒரு ரகம், சம்மதம் இன்றி கால்வைப்பது இன்னொரு ரகம்.

முரண்பாடு எற்பட்டால் ஏதோ ஒரு காரணத்தை வைத்து அமெரிக்கா கால்வைக்க முனையலாம். எனவே தான் அரசாங்கம் விட்டுப்பிடிக்க, நெகிழ்ந்துகொடுக்க இணங்கியுள் ளது.

உண்மையில் அரசாங்கம் அமெரிக் காவுடன் இணங்கிப்போக முனைவ தற்கும் விமல்வீரவன்ச துள்ளிக் குதிப்பதற்கும் காரணம் உள்ளது.

அதுதான் போர்க்குற்றச் சாட்டுக் கள். இதனை முன்வைத்து அமெரிக்கா காலை வைத்துவிடுமோ என்ற பயம் விமல்வீரவன்சவுக்கு இருக்கலாம்.

எங்கே இந்த விவகாரத்தில் முரண்படப்போய் அவர்கள் போர்க் குற்றச்சாட்டை கையில் எடுத்து விடுவார்களோ என்ற பயம் அரசுக்கு. இதுதான் இந்தவிவகாரம் முற்று வதற்கு முக்கியமான காரணம்.

-கே. சஞ்சயன்

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பிரான்சுடன் தொடர்புகளை பேணினார்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கர பண்டாரநாயக்க பிரான்ஸ் ஆதரவாளராகத் திகழ்ந்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் சந்திரிக்கா அமெரிக்காவிற்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க அமெரிக்காவுடன் பேணியளவிற்கு சந்திரிக்கா மிக நெருக்கமான உறவுகளைப் பேணவில்லை என அப்போதைய தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டமைப்பில் கடும் போக்குடைய ஜே.வி.பி. கட்சி அங்கம் வகித்தமை அமெரிக்காவுடன் நெருங்கிப் பழகுவதனை தடுத்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் விவகாரம், காலநிலை மாற்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், வடக்கு கிழக்கு விவகாரம் போன்ற விடயங்களில் சந்திரிக்காவின் நிலைப்பாடு அமெரிக்காவிற்கு முழுமையான சாதகத் தன்மையை வெளிப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிக்காவின் பெற்றோரும் அணிசேரா நாடுகளின் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்ததனால் இவரும் முழுமையாக அமெரிக்கா ஆதரவு கொள்கைகளை பின்பற்றியதாகக் கருத முடியாது. பெற்றோரின் கொள்கைகளும் இதற்கு ஏதுவாக அமைந்திருக்கலாம் என ஆஷ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு மானியம்

## நீரியல் வள திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கும் புதிய செயற்றிட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீளக் குடியேறியுள்ள மீனவக் குடும்பங்களுக்கே பாசிக் நிறுவனம் 50 ஆயிரம் ரூபாவை மானியமாகவும் 50 ஆயிரம் ரூபாவை கடனாகவும் உதவி வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவக் குடும்பங்கள் இந்த நிதியுதவியினைப் பெற்றுக் கொள்ள யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என இந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

இத்துடன் வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு யாழ். குடாநாட்டில் மீளக் குடியேறிய சுமார் 300 குடும்பங்களுக்கு ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் வாழ்வாதார உதவிகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாசிக் நிறுவனம் மட்டுமே தொடர்ந்து மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருவதாகவும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# இந்தியா தப்பிச் சென்ற புலிகள் நாடுதிரும்ப முயற்சி

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

இறுதிக்கட்ட போரின் போது படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீண்டும் நாடு திரும்ப முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கையின் சிங்கள செய்தித்தாள்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் மறைந்து வாழ்ந்து வரும் இவர்கள் மீண்டும் இலங்கை திரும்ப முயற்சி செய்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான விடுதலைப் புலி உறுப்பினர்களை கண்காணிக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக விமான நிலையத்தில் விசேட புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கார் இறக்குமதிகள் அம்பாந்தோட்டையில்

இலங்கைக்கு கார்களை இறக்குமதி செய்பவர்கள் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்தே தமது வாகனங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான அனுமதியை இலங்கையின் துறைமுக அதிகாரசபை வழங்கவுள்ளது.

எனினும் இந்த திட்டத்தை பல வாகன இறக்குமதி நிறுவனங்கள் எதிர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொழும்பு துறைமுகத்தில் அதிக வேலைப்பளு காரணமாக கார் இறக்குமதிகள் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என்று இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த நடைமுறை குறித்து தமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.12
12

★627- பைசண்டைன் பேரரசு இராணுவம் ஹெராகிளியஸ் தலைமையில் பாரசீகப் படைகளைத் தோற்கடித்தன.

★1098-சிரியாவின் மாரட் அல்- நூமன் நகரை திருத்தந்தை இரண்டாம் ஏர்பனின் படைகள் தாக்கி 20 ஆயிரம் பொதுமக்களைக் கொன்றன.

★1787-பென்சில்வேனியா ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது மாநிலமானது.

★1812-ரஷ்யாவின் மீதான பிரெஞ்சுப் படையெடுப்பு முடிவடைந்தது.

★1817-நியூசவுத் வேல்ஸ் ஆளுநர் லக்லான் மக்குவாரி அவுஸ்திரேலியா என்ற பெயரைகாலனித்துவ அரசுக்கு பரிந்துரைத்தார்.

★1862-யாசூ ஆற்றில் ஐக்கிய அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ்.கைரோ என்ற ஆயுதம் தாங்கிக் கப்பல் கண்ணிவெடியில் சிக்கி மூழ்கியது.

★1871-யாழ்ப்பாணத்தில் முழுமையான சூரிய கிரகணம் அவதானிக்கப்பட்டது. இங்கிலாந்தின் வானியலாளர் நோர்மன் லொக்கியர் தலைமையில் ஒரு அறிவியலாளர் குழு இதனைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் வந்தது.

★1901-அட்லாண்டிக் கடலூடாக முதன்முதலாக இங்கிலாந்தில் இருந்து கனடாவின் நியூபின்லாந்தில் வானொலி சமிக்ஞைகளை மார்க்கோனி பெற்றார்.

★1911-இந்தியாவின் தலைநகரம் கொல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது.

★1923-இத்தாலியில் போ ஆற்றின் அணைக்கட்டு வெடித்ததில் 600 பேர் உயிரிழந்தனர்.

★1939-குளிர்காலப் போர்: பின்லாந்துப் படைகள் சோவியத் படைகளை டொல்வஜார்வி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தன.

★1940-இங்கிலாந்தின் ஷெஃபீல்ட் நகரில் உணவு விடுதி ஒன்றின் மீது ஜேர்மனிய விமானங்கள் குண்டு வீசியதில் 70 பேர் உயிரிழந்தனர்.

★1941-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா- பல்கேரியாவின் மீதும் ஹங்கேரி- ருமேனியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீதும் இந்தியா- ஜப்பான் மீதும் போரை அறிவித்தன.

★1941-அமெரிக்கப் போர்க் கப்பல் வேக் தீவுக் கரைக்கப்பால் நான்கு ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தது.

★1941-யூதர்களை வெளியேற்றும் திட்டத்தை அடொல்ஃப் ஹிட்லர் அறிவித்தார்.

★1942-நியூபின்லாந்தில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் 100 பேர் உயிரிழந்தனர்.

★1948-மலேசியாவில் நிலை கொண்டிருந்த ஸ்கொட்லாந்துப் படையைச் சேர்ந்த 14 பேர் பட்டாங்காலி என்ற இடத்தில் உள்ளூர் பொதுமக்கள் 24 பேரைக் கொன்று கிராமத்தைத் தீ வைத்து எரித்தனர்.

★1963-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கென்யா சுதந்திரம் பெற்றது.

★1979-ரொடீசியாவின் பெயர் சிம்பாப்வேயாக மாற்றப்பட்டது.

★1984-மவுரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி முகமது கவுனா ஹைடாலா பதவி அகற்றப்பட்டு மாவோவுயாசிட் அஹமது டாயா புதிய ஜானாதிபதியானார்.

★1985-கனடாவின் நியூபின்லாந்தில் ஐக்கிய அமெரிக்காவின் 248 இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த அனைத்து (256) பேரும் உயிரிழந்தனர்.

★1988-லண்டனில் இரண்டு தொடரூந்துகள் மோதியதில் 35 பேர் உயிரிழந்து 100 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

★1991-ரஷ்யா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

### பிறப்புக்கள்

★1863-எட்வர்ட் மண்ச், ஓவியர் (இ.1944)

★1927-ராபர்ட் நாய்சு, பொறியியலாளர் (இ.1990)

★1949-ரஜினிகாந்த், தென்னிந்திய நடிகர்

★1950-ஏரிக் மாஸ்க்கின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்பு

★1940-தியாகி. விஸ்வநாததாஸ் நாடக நடிகரும் பாரத தேசியவாதியும் (பி.1886)

### சிறப்பு நாள்

★கென்யா- சுதந்திரதினம் (1963)



★1981-இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் யுவராஜ் சிங்கின் பிறந்ததினம்.

# பொன்சேகாவின் விடுதலை குறித்து பேசுவதை இனவாதமாக கருதமுடியாது

## சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை சிங்கள இனவாதி என்று கூறுவதை நான் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. அப்படிக் கூறுபவர்களுடன் எதுவித தொடர்பையும் நான் பேணப்போவதில்லை.

சரத் பொன்சேகா ஒரு சிங்கள இன்வாதி என கூறினால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோர் எப்படி அவருடன் கூட்டணி வைத்திருப்பார்கள்? என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் செயற்பாடு உட்பட அரச எதிர்ப்புப் போராட்டங்களின் போது தமிழர் பிரச்சினை குறித்தும் பேசப்பட மேவண்டுமென்று சில தினங்களுக்கு முன்னர் இடது சாரித் தலைவர்களில் ஒருவரான விக்கிரமபாகு கருணாரட்ன, சஜித் பிரேமதாசவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார் எனச் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது தொடர்பில் விளக்கமளித்த போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலாநிதி விக்கிரமபாகு என்னை ஓர் இனவாதியாக சித்திரிக்க முயல்கிறார். அதனை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். நான் தேசப்பற்றுள்ள ஒருவன். ஆனால், அதற்காக இனவாதம் பேசமாட்டேன். அந்தக் கொள்கையும் என்னிடம் கிடையாது. ஆனால், சரத் பொன்சேகாவை சிங்கள இனவாதி என விக்கிரமபாகு கூறுவதை நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன்.

முப்பது அல்லது நாற்பது பேரை வைத்துக் கொண்டு அரசியல் நடத்தும் விக்கிரமபாகு போன்றோர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான எமது போராட்டத்திற்குத் தேவையுமில்லை.

வடக்கு கிழக்கு தமிழர்களுக்காக எப்போதும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்திருக்கும் நான் அண்மையில் கூட இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பிலான எனது விமர்சனங்களை முன்வைத்திருந்தேன். ஆனால், என்னை இனவாத ரீதியில் நோக்க வேண்டாம்.

சரத் பொன்சேகாவைப் பொறுத்தவரை அவர் சிங்கள இனவாதியல்லர். இதுதான் எனது உறுதியான நிலைப்பாடு. அவர் சிங்கள இனவாதியென்றால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் மனோகணேசனின் கட்சியும் அவருக்கு ஆதரித்திருக்குமா? சரத் பொன்சேகாவின் விடுதலை பற்றிப் பேசுவது இனவாதமல்ல.

எனவே, விக்கிரமபாகு போன்றவர்கள் தேவையில்லாமல் உளறக்கூடாது. சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் எமது போராட்டம் தொடரும். அதேசமயம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காகவும் நாம் எப்போதும் குரல் கொடுப்போம் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் ஜே/66 கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஈச்சமோட்டை வீதி ஈச்சமோட்டை மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கு பற்றுவதன் மூலம் தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்தியினை மேம்படுத்த முடியும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார். (அ)

## தமிழாக்க நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் புகையிலைக்கு மாற்றீடாக மாற்றுப்பயிர்களை அறிமுகம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நூலின் தமிழாக்க வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஹல்டீனும் சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.யூட், வடமாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமாரும் கௌரவ விருந்தினர்களாக புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்னா கூரேயும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வானது பொது மக்கள் மத்தியில் புகைத்தல் பழக்கத்தை குறைப்பதுடன் எதிர்கால சந்ததியினரிடம் அப் பழக்கத்தை தடுப்பதற்கும் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பான ஆய்வின் தொகுப்பு ஆங்கில மொழியில் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையினால் அண்மையில் வெளியிடப்பட்டது. இதன் தமிழாக்கமே யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வெளியிடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வெளியீட்டு விழாவின் போது பொது மக்களின் சுகநலம் கருதி புகையிலை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யாத சகல உணவகங்களினதும் பலசரக்கு கடைகளினதும் உரிமையாளர்கள் சுகாதார திணைக்களத்தினாலும் மதுவரித் திணைக்களத்தினாலும் நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்பானது ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா மூன்று பேருக்கு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு சுகாதாரப் பணிப்பாளர், திணைக்கள உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து சேவா சங்கமும் இணைந்து இந்து இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி பட்டறை நாளை திங்கட்கிழமை தொடக்கம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடத்தப்படவுள்ளது.

இச் செயலமர்வானது ஏழு நாட்கள் வதிவிடப் பயிற்சியாக நடைபெறவுள்ளது. இதில் ஆன்மீக உரைகள், த்லைமைத்துவப் பயிற்சி, யோகாசனம், சூரிய நமஸ்காரம், தியானம், ஆன்மீக செயலமர்வு என்பவை உள்ளடக்கப்படுள்ளன.

இச் செயலமர்விற்கான மேலதிக தவல்களை 0112552641, 0112554975, 0777 168 620 மற்றும் 0777 696289 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்து கொள்ள முடியும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு; கணவன்-மனைவி கைது

(கொழும்பு)

முருங்கன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிச்சக்குளம் பிரதேசத்தில் தங்கநகை மற்றும் பணம் களவாடிய குற்றச்சாட்டின் பேரில் இருவரை முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் களவாடிய நகைகளையும் மீட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் கணவன் மற்றும் மனைவி என் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்தேக நபர்கள் இருவரையும் விசாரணைக்குட்படுத்தி வரும் முரு ங்கன் பொலிஸார் அவர்களை மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவிக்கின்றனர். (அ)

# அடுத்த ஆண்டு, முதல் மாதத்தில் மீள்குடியேற்றம் பூர்த்தியாகும்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதமளவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியாகும் என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாய க்மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் சுமார் 7 ஆயிரம் இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எஞ்சியுள்ள இடம்பெயர் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்த வர்களே இவ்வாறு மீள்குடியேற்றப்படாது எஞ்சியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். எனவே, இவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனவும் அங்கு அவர்கள் மீள் குடியேற்றப்படுவார்கள் எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 40 பேர்சஸ் காணிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். வீடுகளை அமைப்பதற்கு 20 பேர்சசையும் விவசாயத்திற்கு 20 பேர்சசையும் பயன்படுத்த முடியும் என குறிப்பிட் டுள்ளார்.

எனினும், எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக் குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தி யாகும் என அவர் தெரிவித்துள்ளார். மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் மீள் குடியேற்ற அமைச்சின் பணிகள் முடிவுறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை பாராளுமன்றில்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முழு அறிக்கையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

பிழையான அபிப்பிராயங்கள் ஏற்படுவதனை தடுக்கும் நோக்கில் முழுமையான அறிக்கையும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுவேலி கைத்தொழில் வலயத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடும் நிகழ்வின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகாரிகள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழு அறிக்கையின் கண்காணிப்புக்களும் பரிந்துரைகளும் மட்டுமே முதலில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் முழு அறிக்கையும் தற்போது மொழிபெயர்க்கப்பட்டு வருவதாக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சின்மயா மிஷன் சர்வதேச ஆன்மீகத் தலைவரை வரவேற்கின்றோம்

## சுவாமி தேஜோமயானந்தா

சுவாமி தேஜோமயானந்தா அவர்கள் பணிவுக்கும் எளிமைக்கும் ஆழ்ந்த ஞானத்திற்கும் பக்திக்கும் ஒரு உதாரண புருஷராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாது ஆனந்தமாகவும் இன்முகத்துடனும் அனைத்து பக்தர்களும் அணுகக்கூடியவிதத்திலும் ஆழமான கருத்துக்களை அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்திலும் எடுத்துச் சொல்பவராகவும் உள்ளார்.1950 ஆம் ஆண்டு யூன் 30 ஆம் திகதி இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் ஒரு மகாராஷ்டிய குடும்பத்திற்கு சுதாகர் ஹைத்வதே அவதரித்தார். தன்னுடைய முதுமாணிப்பட்டத்தை பௌதீகவியலில் பெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பதாக தனது 20 ஆவது வயதில் ஒரு ஆசிரியராவதற்கு முனைந்தார். அச்சமயம் சுவாமி சின்மயானந்தரின் ஸ்ரீமத்பகவத்கீதை மூன்றாவது அத்தியாயத்தின் சொற்பொழிவு பற்றி விளம்பரத்தை பார்த்ததும் இவருக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதன் பிற்பாடு மும்பாயில் இருக்கக்கூடிய சாந்திப்பனீ சாதனாலயாவில் சின்மயாமிஷனின் வதிவிட வேதாந்தக் கற்கை நெறியை கற்பதற்கு இவருடைய தாயார் அனுமதித்ததும் இவர் பெரும் உவகை அடைந்தார். 1975 ஆம் ஆண்டு வேதாந்த கற்கையை நிறைவு செய்ததும் இவர் சின்மயா மிஷனின் மடாலய துறவு ஆச்சாரியார் வரிசையில் பிரமச்சாரி விவேக சைதன்யா ஆகத் தன்னை இணைத்துக்கொண்டார். பல வருடங்களாக இந்தியாவிலே போபால், கான்பூர், சித்தபாரி ஆகிய இடங்களில் ஆச்சாரியராக சேவை புரிந்தார். சித்தபாரியிலே சாந்திப்னீ மாலையாவில் ஹிந்தி மொழியிலான வேதாந்தக்கற்கை நெறியை நடாத்தினார். 1983 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி பூஜ்ய குருதேவர் சுவாமி சிந்மயானந்தரால் இவருக்குக் சந்நியாச தீட்சை வழங்கப்பட்டு சுவாமி **தேஜோமயானந்தா** என்ற சந்நியாச தீட்சா நாமம் சூட்டப்பட்டது. அதன் பிற்பாடு மும்பாயில் சாந்திப்பனீ சாதனாலயாவில் வதிவிட வேதாந்த கற்றைநெறி ஆச்சாரியாராக தொடர்ச்சியாக இரண்டு கற்றைநெறிக்கே ஆச்சாரியராக விளங்கினார். 1989 ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சாஞ்யோசேயில் உள்ள சின்மய நிலையத்திற்கு வதிவிட ஆச்சாரியாராக நியமிக்கப்பட்டார். 1993 ஆம் ஆண்டு பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் சமாதிக்குப் பிற்பாடு இவர் சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவராக பொறுப்பேற்றார்.

சுவாமி தேஜாமயானந்தா அவர்கள் உலகளாவிய சின்மயா மிஷன் தலைவராகத் தன் சேவையை ஆற்றி வருகிறார்.இச்சேவையை ஆற்றிவரும் இவர் சின்மயா மிஷனில் **பூஜ்யகுருஜி** என அழைக்கப்படுகிறார். பரந்த சிந்தனையாற்றலும் தெளிவான, திடமான முடிவுகளை எடுக்கும் ஆற்றலும் பல புதுவித செயற்றிட்டங்களை இவர் உருவாக்க காரணமாய் இருந்தன. உதாரணமாக கோயம்புத்தூரில் இருக்கும் சர்வதேச சின்மய வதிவிடப்பாட சாலை புதுடில்லியில் இருக்கும் உலகைப்புரிந்து கொள்வ தற்கான சின்மய நிலையம், கேரளாவில் கொச்சினில் இருக்கும் சின்மய சர்வதேச நிலையம் (ஆராய்ச்சி நிலையம்), சென்னையில் இருக்கும் சின்மய நிலையம், பெங்களூரில் இருக்கும் சின்மயாமிஷன் வைத்தியசாலையின் விரிவாக்கம் மற்றும் வட இந்தியாவில் புனேயில் இருக்கும் சின்மய விபூதி நிலையம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சின்மயாமிஷனின் உலகளாவிய ரீதியிலான செயற்றிட்டங்களை மேற்பார்வை பார்ப்பதுவும் உலகத்தில் இருக்கக்கூடிய 300 இற்கும் மேற்பட்ட சின்மய நிலையங்களுக்குச் சுற்றுலா மேற்கொண்டு ஞானயக்ஞங்களை (ஆத்மீக சொற்பொழிவுகளை) நடாத்திவருகிறார். இவருடைய தாராளமான மனம், பக்தியான இதயம், சிந்தனை தெளிவு, நகைச்சுவை உணர்வு, திறந்தமனம், எல்லோரையும் மதிக்கும் மனப்பாங்கு என்பனவெல்லாம் மில்லியன்கணக்கான பக்தர்கள் உலகளாவிய ரீதியில் இவரை வணங்குவதற்குக் காரணமாகும்.

சுவாமி தேஜோமயானந்தர் சமஸ்கிருதம்,ஆங்கிலம், மராட்டி, ஹிந்தி ஆகிய மொழிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். அதுமட்டுமல்லாது சங்கீதத்திலும், கவிதையிலும் சூத்திரங்கள் இயற்றுவதிலும் தேர்ச்சி பெற்றவர். பக்திசுதா, ஞானசாரம், மனசோதனம், தியான சொரூபம் மற்றும் ஜீவன் சூத்திராணி ஆகியவை வேதாந்த நூல்களை இயற்றினார். ஆசிசங்கரரின் திருக்-திருஷ்ய விவேக ரமண மகர்ஷியின் உபதேசாரம், கபிலகீதை, யோக வசிட்டம் ஆகிய நூல்களுக்கு விளக்கவுரைகளை எழுதியுள்ளார்.

அதுமட்டுமல்ல சுவாமி சின்மயானந்தரின் உபநிடதம்,



ஸ்ரீமத்பகவத்கீதை விளக்கவுரைகளை ஹிந்திமொழியில் மொழிபெயர்த்தார். இவருடைய **இந்துகலாசாரம் ஓர் அறிமுகம்** எனும் நூல் அமெரிக்காவில் உள்ள கல்லூரிகளில் ஒரு பாடப்புத்தகமாக காணப்படுகின்றது. நன்றாகப் பாடக்கூடிய இவர் நிறைய பாடற்தொகுதிகளைப் பாடியிருக்கிறார். கதைகளைச் சொல்வதிலும் இவர் வல்லவர். இப்படிப்பட்ட இந்த மகான் சர்வதேச ஆன்மீகத்தலைவர் இன்று எங்கள் யாழ். மண்ணில் புனிதப்பாதங்களைப்பதிப்பதோடு எங்கள் மக்களுக்கு தரிசனம் தரவுள்ளார்.

## ஆன்மீகத்தின் மூலம் மக்களை நல்வழிப்படுத்தும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன்

ஆன்மீக வழியில் மக்களை நல்வழிப்படுத்தச் சிறந்த சிந்தனைகளையும், பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்னும் நோக்கில் உருவாக்கப்பட்டதே யாழ்ப்பாணம் சின்மயா மிஷன். அதுமட்டுமல்லாது மக்கள் பயன் பெறக்கூடிய பல்வேறு சமூகத் தொண்டுகளையும் நிறைவேற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சின்மயாமிஷன் 1951 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் புனே நகரில் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரினால் ஆரம்பிக்கப்பட்டது. இவரது கொள்கைகள் மிக மிக உயர்ந்தவை . நாம் இந்துக்களாக வாழ்வோம், இருப்போம். மிக அதிகமானவர்களுக்கு அதிக நேரத்திற்கு அதிக சந்தோசத்தை அளிப்பது எமது மதம். இப்படி ஆரம்பிக்கப்பட்ட ஆன்மீகப் பணிகள் 1963 ஆம் ஆண்டு சாந்திப்பனீ சாதனாலயா என ஆரம்பிக்கப்பட்டது. பட்டப் படிப்பைப்பூர்த்தி செய்த 20,30 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகள் சாதனாலயா ஆன்மீகப் பணியைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர். இந்த இருவருடப் பயிற்சியின் மூலம் 300 இற்கு மேற்பட்ட ஆன்மீகத் துறவிகள் வெளியேறி உள்ளார்கள். 30 இற்கு மேற்பட்ட நாடுகளில் சின்மயாமிஷன் ஆன்மீகப்பணிகள் நடைபெறுகின்றன.

1. சிறுவர்களுக்கு பாலவிகார் 2. இளைஞர் யுவதிகளுக்கு யுவகேந்திரா 3. பெரியவர்களுக்கு வாசகர் வட்டம் 4. தாய்மார்களுக்கு தேவியர் வட்டம் என்ற வகையில் வாராந்த ஆன்மீக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இத்துடன் ஆன்மீகச் சொற்பொழிவுகள், பயிற்சிப்பட்டறைகள், முகாம்கள், கருத்தரங்குகள் பலவும் நடாத்தப்படுகின்றன.

இலங்கையில் 1979 ஆம் ஆண்டு கொழும்பில் சுவாமி சின்மயானந்தரின் வருகையுடன் பல்வேறு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ராம்போத எனும் இடத்தில் பக்த ஹனுமான் ஆலயத்துடன் சின்மயாமிஷன் ஆரம்பிக்கப்பட்டு பலவிதமான நற்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் தனது ஆன்மீக சேவையை வழங்க ஆரம்பித்த சின்மயாமிஷன் வடமாகாணத்திலும் மக்களுக்குச் சேவையை வழங்க வேண்டும் எனப் பேரவா கொண்டது. அதனைத் தொடர்ந்து வடமாகாணத்தில் இடம்பெற்ற போர் அனர்த்தங்கள், இதனால் மக்களுக்கு ஏற்பட்ட உளத்தாக்கங்கள் யாவற்றையும் அறிந்து கொண்டது. அதன் பிரகாரம் தவத்திரு சுவாமி சின்மயானந்தரின் ஆசியுடன் 2011 ஆம் ஆண்டு தை மாதம் சின்மயாமிஷன் தனது பணிகளை ஆரம்பித்தது. வதிவிடத் துறவி பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகளின் வழிகாட்டலில் பாடசாலைகள், அலுவலகங்கள், ஆலயங்கள், தனியார் நிறுவனங்கள் தோறும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. கொக்குவில், நல்லூர், அளவெட்டி ஆகிய இடங்களில் ஆன்மீக வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

சின்மய ஆன்மீக என்பதன் பொருள் சித்து+மயம் என்பதற்கு இணங்க தூய அறிவுடன் ஆன்மீக வழியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இளம் துறவிகளால் இந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆன்மீகம், கல்வி, சமூகத் தொண்டு உட்பட சுயதொழில் வேலைவாய்ப்பை பெறக்கூடிய பல்வேறு சமூக சேவைகளை இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மீகப் பணிகளில் குறிப்பாக போரினால் பாதிப்படைந்த மக்களின் மனத்தாக்கங்களை ஆறுதல்படுத்தும்முகமாக ஆன்மீக உரைகளையும் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதில் மகத்தான சேவையை வழங்கிவருகின்றது. மன உளைச்சல்களுக்கு ஆளான மக்களின் மனங்களை ஒருநிலைப்படுத்தி ஒழுங்கான விழுமியமான பண்புகளை பின்பற்றக்கூடிய வகையில் பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதுமட்டுமல்லாது அரிய மஹோற்சவங்களின் பெருமைகள், அவற்றின் வரலாறு உட்பட சமயப்பெரியார்களின் சேவைகளையும் கதைகள், கருத்துக்கள் வாயிலாக பொதுமக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய பல்வேறு சொற்பொழிவு நிகழ்வுகளை நடத்திவருகின்றது. அத்துடன் வாழ்க்கைமுறை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் மட்டுமல்லாது அரச பிரதேச செயலகங்கள், அரசவங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களிலும் ஆன்மீக சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன.

இவ்வாறு பொது இடங்களுக்கு சென்று ஆன்மீகத் தொண்டுகளை வழங்கி வரும் சின்மயாமிஷன் வாரம் தோறும் ஆன்மீக வகுப்புக்களை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி ஆன்மீக வகுப்புக்கள் இளையோருக்கு, முதியோருக்கு என இரு பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. 30 வயதுக்குக் கீழ்பட்ட இளைஞர், யுவதிகளுக்காக சின்மய யுவகேந்திரா வகுப்பு இடம்பெறுகின்றது. யுவ என்றால் இளைஞர்கள், **கேந்திரா** என்றால் சந்திக்கும் இடம் எனும் பெயருடன் குறிப்பிட்ட நாட்களில் சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆன்மீக வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த ஆன்மீக வகுப்பில் இளைஞர், யுவதிகளுக்கு அறிவுரைகளையும் நற்சிந்தனைகளையும் கூறக்கூடிய் பல்வேறு தகவல்கள், கலந்துரையாடல்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

வாழ்க்கை முறை, மனக்கட்டுப்பாடு, வாழ்க்கையை வெற்றி கொள்வது எவ்வாறு? சிறந்த உறவுநிலைகளை எவ்வாறு பேணுவது போன்றன தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. ஆன்மீக ரீதியாக பல்வேறு கருத்துரைகளை வழங்கி இளம் சமுதாயத்தினை ஆன்மீகவழியில் நல்வழிப்படுத்த வேண்டும் எனும் நோக்கத்துடன் இந்த சேவை இடம்பெறுகின்றது. அத்துடன் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சின்மய வாசகர் வட்டம் வகுப்பும் இடம்பெறுகின்றது. அனைத்து மதம்சார்ந்த மக்களும் பயன்படக்கூடிய முறையில் இந்த ஆன்மீக வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக நடத்தப்படுகின்றது.

யாழ். சின்மயா மிஷனின் ஆன்மீக சேவைகளை விட சமூகசேவைகளும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக வறிய பிரதேசங்களை இலக்குவைத்து இந்த சமூக சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தாய்-தந்தையை இழந்த பாடசாலை மாணவர்கள், விதவைகள் ஆகியோரின் குடும்பங்களின் வாழ்வாதார குறையை நிறைவேற்றக்கூடிய பல்வேறு சமூக சேவைகள் இடம்பெறுகின்றன. இப்பணியால் 100 இற்கு மேற்பட்ட சிறுவர்கள், 300 இற்கு மேற்பட்ட தாய்மார்கள் பயனடைந்து வருகிறார்கள்.

உலக சின்மயாமிஷன் தலைவர் தவத்திரு ஜய குருஜி சுவாமி தேஜோமயானந்தா அவர்களே வருக! வருக! ஆசி தருக! தருக!

யாழ். சின்மயாமிஷன்

**எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 13 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாலை 4.30 மணிக்கு peaceinarestless world ( அமைதியற்ற உலகில் அமைதி) எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஆன்மீக சொற்பொழிவு ஆற்ற இருக்கின்றார். தமிழ் மொழிபெயர்ப்பு வசனத்திற்கு வசனம் வழங்கப்படும். அனைவரும் வருக! அருள் பெறுக!**

## அணுசக்தி விவகாரம் அமெ.-இந்தியா பேச்சு


(சென்னை)

அணுசக்தி நஷ்டஈடு மசோதா குறித்து தேசியப் பாதுகாப்புச் செயலர் சிவசங்கர மேனனுடன் அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று திங்கட்கிழமை இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இதன் மூலம் அணுசக்தி உடன்பாட்டில் நெருடலாகக் கருதப்படும் அம்சங்கள் களையப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெளியுறவுத்துறை செயலர் எஸ்.எம்.கிருஷ்ணாவையும் பர்ன்ஸ் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது அரசின் பிற துறை உயரதிகாரிகளுடன் இருதரப்பு உறவுகள், பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் பர்ன்ஸ் விவாதிக்கவுள்ளார்.

இந்திய- அமெரிக்க அணுசக்தி உடன்பாட்டில் அணுஉலை விபத்திற்குள்ளானால் நஷ்ட ஈடு வழங்குவது குறித்த அம்சத்தில் இரு நாடுகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. 2008 ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (அ-2)

# தமிழக சட்டசபையைக் கூட்டக்கோரி பெருமளவில் திரண்ட மக்கள்



தேனி மாவட்டம் கம்பம் கூடலூர் பகுதிகளை சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்று முன்தினம் ஐந்து இடங்களில் பொலிஸ் ஏற்படுத்திய தடைகளை மீறி குமுளிக்குள் அணிவகுத்தனர். கேரளா செல்லும் 13 பாதைகளையும் அடைக்க வேண்டும். தமிழக சட்ட சபையை உடனடியாக கூட்டி இதற்காக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் நடத்துவதால் எல்லையில் பெரும் பதற்றம் உருவாகியது.

தேனி மாவட்டத்தில் இருந்து கேரளா செல்லும் போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளது. சபரிமலை சென்று விட்டு திரும்பும் தமிழக பக்தர்கள் மீது கேரள கும்பல் தாக்குதல் நடத்தி வருகிறது. இது தமிழக மக்களை மேலும் கொதிப்படையச் செய்துள்ளது.

இந்நிலையில் கேரள சட்டசபை விஷேட கூட்டத்தைக் கூட்டி பெரியாறு அணைக்கு பதிலாக பதிய அணைகட்ட வேண்டும். தற்போதைய நீர்மட்டத்தை 120 அடியாக் குறைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியது. கேரள அரசின் இந்த செயல் தமிழக மக்களை மேலும் கொந்தளிக்க வைத்துவிட்டது.

**50 ஆயிரம் பேர் திரண்டனர்.**

50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் காலை கூடலூரில் திரண்டனர். இவர்களில் பாதிப்பேர் பெண்கள். இவர்கள் அனைவரும் கேரள எல்லையான குமுளியை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். பாதுகாப்பு பணியில் இருந்த ஆயிரத்து 500 பொலிஸார் தடுக்க முயற்சி செய்தும் 50 ஆயிரம் மக்கள் திரண்டதால் தடுக்க முடியாமல் தவித்தனர். கூடலூர் பகவதியம்மன் கோவில் லோயர் கேம்ப் பகுதியில் இரண்டு இடங்கள் என ஐந்து இடங்களில் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். பொலிஸார் தடைகளை தகர்த்த மக்கள் குமுளியின் தமிழக பகுதிக்குள் நுழைந்தனர்.

கேரளா செல்லும் 13 பாதைகளையும் உடனே சீல் வைத்து மூட வேண்டும். கேரளாவிற்கு எதிரான பொருளாதார முற்றுகையை உடனே ஆரம்பிக்க வேண்டும். தமிழக சட்டசபையின் விசேட கூட்டத்தை கூட்டி அணை நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என மக்கள் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

**குமுளியில் கடைகள் அடைப்பு வீதிகள் வெறிச்சோடின**

குமுளியில் தமிழக குமுளி, கேரள குமுளி என இரண்டு குமுளிகள் உள்ளன.

மக்கள் குமுளிக்குள் புகுந்தால் விபரீதம் ஏற்பட்டுவிடும் என பயந்த கேரள வியாபாரிகள் கடைகளை அடைத்து விட்டனர். மக்கள் வீடுகளை பூட்டி விட்டனர். மக்கள் திரண்ட ஓரிரு நிமிடத்தில் கேரள குமுளி முழுக்க வெறிச்சோடி விட்டது.

சுருளிப்பட்டி கிராமத்தில் இருந்து திராட்சை விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள், 3 ஆயிரம் பேர் ஊர்வலமாக புறப்பட்டனர். 500 இற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த ஊர் வலத்தில் வந்தனர்.

சுருளிப்பட்டியில் இருந்து நடந்தே வந்த இவர்களை கம்பம் வஉசி திடலில் பொலிஸார் மறித்தனர். பொலிஸாரின் எச்சரிக்கையையும் மீறி பொதுமக்கள் கூட்டம் குமுளி வீதியில் சென்றது.

**கல்வீச்சு**

தமிழக விவசாயிகளும் பொதுமக்களும் குமுளி சோதனைச்சாவடி அருகே தடுத்து நிறுத்தப்பட்டு இருந்தபோது கேரள பகுதியில் இருந்து சரமாரியாக கற்கள் வீசப்பட்டன. கேரள மாநிலத்தை சேர்ந்த சிலர் சோதனைச்சாவடி அருகே மலைப் பாதை வழியாக சென்று அங்கிருந்தபடி தமிழக விவசாயிகள் மீது கற்களை வீசினார்கள். இதில் 2 பேர் காயமடைந்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழக பகுதியில் நின்று கொண்டிருந்தவர்களும் மலைப் பாதையை நோக்கி கற்களை வீசினர். (அ-2)

## பாரதச் செய்திகள்

## முல்லைப்பெரியாறு விடயத்தில் களத்தில் இறங்குவாரா விஜயகாந்த்?

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் அனைத்து கட்சிகளும் களத்தில் இறங்கி போராடி வரும் நிலையில் வெறும் கண்டன அறிக்கைகளை மட்டும் தே.மு.தி.க விட்டு வருகிறது. தமிழகத்தில் பால் மற்றும் பஸ் கட்டணம் உயர்த் தப்பட்டதை கண்டித்து தே.மு. தி.க. கட்சிகள் சார்பில் சென்னையில் ஒரு நாள் உண்ணா விரத நிகழ்ச்சி கடந்த சில வாரங்களுக்கு முன்பு நடந்தது. இதில் பங்கேற்ற கட்சியின் தலைவர் வியஜகாந்த் கட்டண உயர்வுக்கு எதிராக கொதித்து எழுந்தார்.

அன்றைய தினம் அவர் அளித்த பேட்டியில் தான் வேட்டியை மடிச்சுக்கட்டும் நேரம் வந்து விட்டதாக சூடுகிழப்ப பேட்டி அழித்தார்.

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் பெரியளவில் வெடித்துள்ளது.

இவ்விவகாரத்தில் வெறும் கண்டன அறிக்கைகளை மட்டுமே அளித்து வருகின்றது. குறிப்பாக உண்ணாவிரதத்தின்போது நம்பிக்கை தரும் வகையில் பேசிய அக்கட்சியின் தலைவர் வியஜகாந்த் இந்த விடயத்தில் தற்போது அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு வருகிறார்.

அறப்போராட்டங்களில் ஏனைய கட்சிகளோடு கைகோர்த்து தே.மு.தி.கவும் களம் இறங்க வேண்டும் என்பதே அக் கட்சியின் தொண்டர்கள் விரும்புகின்றனர். இந் நிலையில் மீண்டும் வியஜகாந்த் வேட்டியை மடித்துக்கட்டுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (அ-2)

## புதிய அணை கட்டுவதற்கு தமிழக முதல்வரின் அனுமதி தேவையில்லை

(திருவனந்தபுரம்)

முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அனுமதி எங்களுக்கு தேவையில்லை என்று கேரள நிதியமைச்சர் கே.எம். மாணி கூறினார். முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்ட வலியுறுத்தி கோட்டயத்தில் நேற்று முன்தினம் நடந்த உண்ணாவிரத போராட்டத்தில் கேரள நிதியமைச்சர் கே.எம்.மாணி பேசியதாவது,

முல்லைப்பெரியாறு அணை பலவீனமாக உள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். சமீபத்தில் அந்த அணையை பார்வையிட சென்ற கேரள எம்.எல்.ஏக்கள் குழு அணையில் இருந்து பல இடங்களில் நீர்க்கசிவை கண்டு பிடித்துள்ளனர். ஆனால், அணை பலமாக இருப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளார். அதில் ஜெயலலிதாவின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. அவர் எத்தனை கட்டுரை எழுதினாலும் அணை பலவீனமாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது என்றார். (அ-2)

## குளிர்கால கூட்டத்தொடரில் கலந்து கொண்ட கனிமொழி



இந்தியாவில் நடந்த 2ஜி வழக்கில் நிபந்தனையுடனான பிணை பெற்றுள்ள கனிமொழி நீண்ட நாட்களுக்கு பின்பு நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டார்.


கனிமொழி தினமும் மத்திய புலனாய்வு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் 2 ஜி வழக்கு விசாரணையில் ஆஜராகி வருகிறார்.

கடந்த வியாழக்கிழமை மாலை மத்திய புலனாய்வு சிறப்பு நிதிமன்றத்தில் விசாரணை முடிந்த பின்பு கனிமொழி நேராக நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவரை நாடாளுமன்ற வளாகத்தில் பல்வேறு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகுலுக்கி வரவேற்றனர்.

ராஜ்யசபா கூட்டத்தில் பங்கேற்ற கனிமொழியிடம் உள்ளே அமர்ந்திருந்த உறுப்பினர்கள் நலம் விசாரித்தனர்.

கனிமொழி நாடாளுமன்றத்தில் இருந்த போது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி விலைவாசி உயர்வு பற்றிய விவாதத்துக்கு பதில் கூறிக் கொண்டிருந்தார். அந்த விவாதம் முடியும் வரை ராஜ்யசபா கூட்ட அரங்கில் கனிமொழி அமர்ந்திருந்தார்.

கடந்த 9 ஆம் திகதி மத்திய புலனாய்வு சிறப்பு நீதிமன்ற விசாரணை ஒத்தி வைக்கப்பட்டதையடுத்து 2ஆவது நாளாகவும் கனிமொழி நடாளுமன்ற குளிர் காலக்கூட்டத்தில் கலந்து கொண்டார். (அ-2)



முன்னாள் தமிழக முதல்வர் ராஜாஜியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் சபாநாயகர் மீராகுமார் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

பேச்சு அதிகம் வேண்டாம். அனைத்துக்கும் சுருக்க மான பதில், உங்கள் காரியங்களை செய்து முடிப் பதுதான். ~ ஜார்ஜ் ஹெர்பெர்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடபகுதி வீதிகளில் பராக்கிரமபாகுவின் சிந்தனை

ஒரு துளி மழை நீரையேனும் கடலுடன் கலக்க விடலாகாது என்று கூறியவர் பராக்கிரமபாகு மன்னன். அவரின் கருத்து மழை நீரை சேமிக்க வேண்டும் என்பதாகும்.

இதற்காக மன்னன் பராக்கிரமபாகு மிகப் பெரும் குளங்களைக் கட்டுவித்தான். மழை நீரை சேமிப்பதன் மூலம் நிலத்தின்கீழ் நீர் பாது காக்கப்படுவதுடன் வேளாண் செய்கையும் சிறப் பாக அமையும்.

மன்னன் பராக்கிரமபாகுவின் சிந்தனையை எழுதும் போது,

'தண்ணீராலேயே மூன்றாம் உலகப் போர் ஏற்படும்' என்று இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அண்மையில் கூறிய கருத்து நம் சிந்தையைத் தட்டுகிறது.

12ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த பராக் கிரமபாகு மன்னன் மழைநீரை சேமிக்க வேண்டு மென நினைத்த தூர நோக்கின் கனதியை நினைத்துப் பார்க்கும்போது இதயம் கனிந்து கொள்கின்றது.

அத்தகைய மன்னன் ஆட்சிசெய்த நாட்டில் இப்போதெல்லாம் தலைகீழ்.

எங்கள் வட பகுதியில் சிறு குளங்கள். அவற்றை பராமரிப்பதிலும் பல இடர்கள். இதன் காரண மாகவோ என்னவோ இப்போது வடபகுதியிலுள்ள பெரும்பாலான வீதிகளிலேயே மழை நீர் சேமிக்கப்படுகிறது.

வீதிகளில் இருக்கக் கூடிய குன்று குழிகளில் தேங்கிநிற்கும் மழைநீர் தொடர்பில் ஒரு கணக் கெடுப்பு நடத்தினால் இன்னொரு இரணைமடு குளத்தை கட்டலாம் போல் தோன்றும்.

ஏன்தான் இப்படி சில வேளைகளில் பராக் கிரமபாகு மன்னன் ஒரு துளி மழை நீரையேனும் கடலுக்குள் கலக்க விடலாகாது எனக் கூறி யதை தெரிந்து வைத்திருப்பவர்கள் அந்த மழை நீரை வீதிகளில் சேமித்து விடுவது நல்லதென நினைத்தார்களோ என்னவோ?

எங்கள் வடபகுதியிலுள்ள பெரும்பாலான வீதி கள் குன்று குழியென ஒரே அலங்கோலம்.

வடக்கின் வசந்தம் என்று கூறப்பட்டாலும் ஒரு சில வீதித்திருத்தத்துடன் வடக்கில் வசந் தத்தை ஏற்படுத்திவிடமுடியாது.

வீதிகளில் இருக்கக் கூடிய குன்று குழிகளால் ஏற்படக் கூடிய விபத்துக்கள், பாதசாரிகள் அனு பவிக்கும் துயரங்கள், வாகனங்கள் சேதமடை தல் எனப் பெரும் துன்பத்தை மக்கள் அனுப விக்கின்றனர்.

இது தொடர்பில் உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இல்லையேல் மாரி காலத் தில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை தாராள மாக அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# பொய்யான முறைப்பாடு செய்த பெண்ணுக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

தனது காதலனுடன் சுற்றித் திரிந்த போது பொலிஸாரால் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த பெண் ஒருவர், தான் சட்டவிரோத மாக உள்ளுறுப்புகள் அகற்றி விற் பனை செய்யும் போலி வைத்திய சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் தப்பிவந்ததாக பொய் கூறி யமை அம்பலமாகியுள்ளது.

தம்புள்ளையைச் சேர்ந்த இப் பெண் ஒக்டோபர் 18ஆம் திகதி கண்டி யிலுள்ள வைத்தியசாலைக்கு செல்வ தாகக் கூறிச் சென்றுள்ளார்.

ஆனால் அவர் அன்று வீடு திரும்ப வில்லை. அப்பெண்ணை தேடிக் களைத்த அவரின் கணவர், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தார்.

இது குறித்து நாடு முழுவதும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந் தது. 15 நாட்களின் பின்னர் அப்பெண் தம்புள்ளையிலுள்ள வீட்டிற்கு திரும்பி வந்தார்.

தான் கண்டியில் மேற்படி வைத்திய சாலையில் இருந்தபோது, தன்னை அணுகிய இரு நபர்கள், தாம் தென்னிந் தியாவிலிருந்து வந்த மருத்துவர்கள் என கூறிக்கொண்டு, தனக்கு இலவச மருத்துவச் சிகிச்சை செய்ய முன்வந் தனர் எனவும் அப்பெண் கூறினார்.

மருத்துவ சத்திரசிகிச்சையாளர்கள் போல் ஆடை அணிந்திருந்த குழு வொன்று அங்கு காணப்பட்டதாகவும் அவர்கள் தனது உள்ளுறுப்புக்களை அகற்றி அதிக விலைக்கு இந்தியாவில் விற்பனை செய்ய முயன்றதாகவும் தான் அறிந்து கொண்டதாக அவர் கூறினார்.

பின்னர் தன் மீது அனுதாபம் கொண்ட ஊழியர் ஒருவரின் உதவியுடன் வைத் தியசாலையிலிருந்து தப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

எனக்குத் தெரியாத இடம் ஒன்றிலி ருந்து இரவு ரயில் ஒன்றில் நான் ஏறி னேன். அதன்பின் நான் கோட்டை ரயில் நிலையத்தில் காணப்பட்டேன். பின்னர் ஒரு தம்பதி எனக்கு 500 ரூபாயை தந்துதவி னர்.

அதன் மூலம் நான் தம்புள்ளைக்கு திரும்பிவந்தேன் என அப்பெண் கூறி னார். இப்பெண் கூறிய கதை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களிலும் வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக விசாரிப்பதற்கு விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் புலனாய்வு குழுக்களும் நியமிக்கப்பட்டன. சுமார் இருமாத காலம் கடும் விசாரணைகளுக் குப்பின்னர் பொலிஸார் உண்மையைக் கண்டறிந்தனர்.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறுகையில், உண்மைக் கதை என்னவென்றால், அப்பெண் மருத் துவ மனைக்குச் செல்லாமல் காதலர் ஒரு வருடன் பொலநறுவைக்குச் சென்று விடுதி அறையொன்றை பதிவு செய்துள்ளார்.

அன்றிரவு இந்த ஜோடி விடுதியிலிருந்து வெளியேறி தம்புள்ளைக்குச் செல்ல தீர் மானித்துள்ளனர்.

பொலிஸ் ரோந்து பிரிவினரால் இவர் கள் விசாரிக்கப்பட்ட போது தாம் அங் கியிருப்பதற்கான காரணம் எதையும் இவர் களால் கூற முடியவில்லை.

அதனால் இவர்கள் பொலிஸ் நிலை யத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் நீதிமன்றில் நிறுத்தப்பட்ட னர்.

நாடோடி கட்டளைச் சட்டத்தின் கீழ் இவர்கள் குற்றம் சுமத்தப்பட்டு 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப் பட்டனர்.

இத்தகைய இந்திய மருத்துவர் களோ போலி மருத்துவ நிலையமோ இருக்கவில்லை. தான் 14 நாட்கள் விளக்க மறியலில் இருந்ததை மறைப் பதற்காக அவர் கட்டிய கதை இது.

ஆனால் இக்காலத்தில் விசாரணை களுக்காக பெருமளவு பொதுமக்கள் பணமும் பொலிஸாரின் நேரமும் இதற்கு விரயமாகியுள்ளது. அத்துடன் நாட்டின் மதிப்பும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்ளுறுப்புக்களை திருடி விற்கும் சம்பவங்கள் ஏனைய ஆசிய நாடுகள், ஆபிரிக்க மற்றும் 3 ஆம் உலக நாடுகளில் மாத்திரமே நடை பெறுகிறது. இலங்கை ஒரு போதும் இதில் விழவில்லை. அதனால் தான் இம் முழுவிடயத்தினதும் அடித்தளத்தை கண்டறிய நாம் உறுதி பூண்டோம் என்றார்.

இப் பெண் மீண்டும் கைது செய்யப் பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். பொலி ஸாரிடம் பொய்யான முறைப்பாடு செய்த குற்றத்திற்காக அவருக்கு 25 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது. (எ)

# ஜே.வி.பி.மாற்றுக்குழ உறுப்பினர்கள் கடத்தப்பட்டமைக்கு அரசே பொறுப்பு

## பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட ஜே.வி. பியின் மாற்றுக் குழுவைச் சேர்ந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் முருகநாதன் குகன் ஆகியோர் காணாமல் போயுள்ள மைக்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும் என மக்கள் போராட்டக் குழு வின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் லலித் குமார் வீரராஜ் கொல்லப்பட்டு விட்டதாக தமக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் கிடைத் துள்ளதாக சமீரகொஸ்வத்த ஊடகவியலா ளர்களுக்கு கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவிய லாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர், லலித்குமார் வீரராஜ் எங்கிருக் கிறார் என்பது குறித்து தமக்கு தெரியாது எனவும் அவரது உயிருக்கு ஆபத்து உள்ளமை தெளிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த அவர் ஊடகவியலா ளர்களுக்குமேலும்தெரிவித்துள்ளதாவது, வடக்கில் மேற்கொள் ளப்படும் அரசியல் செயற்பாடுகளில் லலித் குமார் வீரராஜை ஈடுபட வேண்டாம் என்றும் இல்லையேல் அவரை அரசியலில் இருந்து அகற்று வோம் என்றும் அவரின் தந்தை தொலை பேசியில் மிரட்டப்பட்டுள்ளார்.

வடக்கில் போதிய அரசியல் பலத்தை கொண்டிராத ஜே.வி.பிக்கு இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புகள் இருக்க முடியாது. இந்நிலையில் இவ்விருவரின் விடுத லையை வலியுறுத்தி விரைவில் மக்கள் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது என மக்கள் போராட்டக் குழுவின்தேசியஒருங்கிணைப்பாளர் சமீர கொஸ்வத்தமேலும்தெரிவித்துள்ளார். (எ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## *மனதை கையாள பயிற்சி*



இளமையும் வலிமையும் வளமையும் அறிவுக் கூர்மையும் உடையவர்களே இறைவனை அடையக் கூடியவர்கள்.

நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூர ணத்துவமும் பெற்றவர்கள்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. அத் துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந் தாக வேண்டும்.

நீ வலிமையுள்ளவனாக இருந்தால் நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய். அன்றைய தினம் மலர்ந்தும் பிறரால் தொடப்படாததும் நுகரப்படாததுமான புத்தம்புதிய மலர்களே இறைவனின் பாத கமலங்களில் இடுதற்குரிய தகுதி பெற்றவை. இறைவனும் அவற்றையே விரும்பிட ஏற்கிறான்.

சிந்தனையின் ஆற்றல் தொண்ணூறு சதம் சாதாரண மனிதனால் வீணாக் கப்படுகிறது. எனவே அவன் தவறுகளை செய்து கொண்டே இருக்கின்றான். சரியான பயிற்சியைப் பெற்றவனே தவறு செய்வதில்லை.

# ரஷ்யாவில் தேர்தல் முறைகேடு; பேரணி நடத்திய 800 பேர் கைது

ரஷ்யாவில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றது எனக்கூறி நேற்று முன்தினம் தலைநகர் மொஸ்கோவில் 15 ஆயிரம் பேர் கலந்து கொண்ட மாபெரும் பேரணி நடந்தது.

ரஷ்யாவில் கடந்த 4 ஆம் திகதி நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் முறைகேடுகள், மோசடிகள் நிகழ்ந்தன.

பல வாக்குச்சாவடிகளில் கள்ள வாக்குகள் போடப்பட்டன. மொத்தத்தில் பிரதமர் விளாடிமிர் புடினின் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சிக்கு ஆதரவாக இத்தேர்தல் நடத்தப்பட்டது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

தேர்தல் மோசடி குறித்த ஆதாரங்கள் வெளியிடப்பட்டன.அமெரிக்கா தேர்தல் மோசடி குறித்து கவலை தெரிவித்தது. கடந்த வாரத்தில் தொடர்ந்து இரு நாட்கள் தொடர் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. இதில் 800 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் திட்டமிட்டபடி தலைநகர் மொஸ்கோவில் உள்ள நாடாளுமன்றத்தின் கிரெம்ளின் கட்டடம் முன்பு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பாதுகாப்புக்காக 50 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப் பட்டனர்.

நாட்டின் பல நகரங்களிலிருந்தும் காலை முதல் ஆயிரக்கணக் கானோர் மொஸ்கோவில் குவியத் தொடங்கினர். இதனால் அனுமதியளிக்கப்பட்ட ஒரே ஒரு இடத்தைத் தவிர பிற இடங்களிலும் கூட்டம் சேர ஆரம்பித்தது.

பல இடங்களிலும் கணக்கு வழக்கின்றி மக்கள் வந்து கொண்டே இருந்ததால் பொலிஸாரால் போதிய நடவடிக்கை எடுக்க முடியவில்லை. செயின்ட்பீட்டர்ஸ்பர்க்கில் நேற்று 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர். அதேபோல் உ்ரால்ஸ், சைபீரியா உட்பட பலபகுதிகளிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட பேரணி, ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

அடுத்தாண்டில் நடக்க உள்ள ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் புடின் போட்டியிட உள்ளார். ஆனால் தேர்தல் மோசடி குறித்து இந்த ஆர்ப்பாட்டங்கள் அவருக்கு மேலும் நெருக்கடி அளிக்கும் வகையில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.எதுவுமே இல்லாத ஒரு குடிமகன் தான் மிகமிக சந்தோஷமாக இருப்பதாக சொல்லமாட்டான். இங்கு சுதந்திரமான நீதி இல்லை, கருத்து சுதந்திரம் இல்லை. இந்த பிரச்சினைகள் தான் மக்கள் இன்று தெருவுக்கு வரக்காரணம் என்று கூட்டத்தில் ஈடுபட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது. (அ-2)



## டோக்கியோவில் நிலநடுக்கம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆயிரத்து 300 கி.மீ தொலைவில் உள்ள கொகிஷிமா என்ற இடத்தில் நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் ஏதுமில்லை.சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை என அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோளில் 5.8 ஆக பதிவானது.மெக்சிகோ, மெக்சிகோவின் மேற்கு பகுதியில் உள்ள குரோரியோ மாநிலத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோளில் 6.7 ஆக பதிவாகியுள்ளது.இதனால் கட்டடங்கள் கடுமையாக குலுங்கின. மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தில் 11 வயது சிறுவன் உட்பட 2 பேர் பலியானார்கள்.(அ-2)

## ஏமன் நாட்டில் மோதல் தொடர்கிறது

ஏமன் நாட்டில் இடைக்கால அரசு நேற்று முன்தினம் பதவியேற்றது. இந்நிலையில் நாட்டின் பல பகுதிகளில் ஜனாதிபதியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் மோதல் தொடர்கிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசு நேற்று முன்தினம் பதவியேற்றது. இதில் துணை ஜனாதிபதி அப்துல் அபு மன்சூர் ஹாடி பங்கேற்றார். 34 அமைச்சர்களைக் கொண்ட இந்த அரசு மூன்று மாதங்களுக்கு பதவியில் இருக்கும்.

அடுத்தாண்டு பெப்ரவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்கும். அதன் பின் நாட்டில் ஒரு நிலையான அரசியல் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## சிரிய நகரத்திலிருந்து இராணுவத்தை விலக்குமாறு பிரிட்டன் எச்சரிக்கை

சிரியாவில் ஹோம்ஸ் நகரத் திலிருந்து தனது இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் சிரியாவை எச்சரித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலிஸ்ட்டேர்பர்ட் கூறுகையில், சிரிய அரசு இராணுவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். கடந்த நவம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற அரபு கூட்டமைப்பு நாடுகளின் கூட்டத்தில் சிரியா இதனை ஏற்கனவே ஒத்துக்கொண்டுள்ளது.

வன்முறையை முற்றிலும் ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் நகரங்களிலிருந்து தனது இராணுவத்தைத் திரும்பப் பெறுவதாகவும் சிறையில் வைத்துள்ளவர்களை விடுதலை செய்வதாகவும் அரபு நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் சர்வதேச ஊடகத்தின் கண் காணிப்புக்கு உடன்படுவதாகவும் சிரியா கையெழுத்திட்டுள்ளது.

ஆனால் இப்போது ஹோம்ஸ் நகரத்தில் இந்த உடன்பாட்டை மீறி இராணுவத்தை கொண்டு அப்பாவி பொதுமக்களின் உயிர்களுக்கு ஆபத்து விளைவித்துள்ளதை இனியும் பொறுத்துக் கொள்ள இயலாது. சிரிய அரசு உடனே இதனை நிறு த்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

## விமானம் மோதி விபத்து; பன்னிரண்டு பேர் உயிரிழப்பு

(மணிலா)

சிறியரக விமானம் பள்ளியின் மீது மோதிய விபத்தில் இரு குழந்தைகள் உட்பட 12 பேர் பலியானார்கள். ஆறு முதல் எட்டு பேர் செல்லக்கூடிய சிறிய விமானம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து மிண்டோரா தீவிற்கு சென்றது. இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் மணிலாவின் புறநகர் பகுதியில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் மோதி தீ பிடித்தது. இந்த விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 12 பேர் பலியானார்கள். விமானத்தில் பயணம் செய்தவர்கள் பற்றி தகவல்கள் இல்லை. விமானியையும் காணவில்லை. மீட்பு பணிகளில் செஞ்சிலுவை சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

(அ-2)




## அமைதிக்கான நோபல் பரிசை மூன்று பெண்கள் பெற்றனர்



அமைதிக்கான நோபல்பரிசைமூன்று பெண்கள் பெற்றுக் கொண்டனர். இந்தப் பரிசு லிபெரியா ஜனாதிபதி எல்லன் ஜான்சன் சர்லிப், அதே நாட்டைச் சேர்ந்த லெமக் போவீ, ஏமன்நாட்டின் டவாக்குல் கர்மன் ஆகியோருக்கு வழங்கப் பட்டுள்ளது.பலத்த கரகோஷத்துக்கிடையே தங்களுக்கான பரிசு மற்றும் பதக்கங்களை இவர்கள் பெற்றுக் கொண்டனர்.அநீதி, சர்வாதிகாரம், பாலியல் வன்முறை ஆகியவற்றிற்கு எதிராக போராடியதற்காக இவர்களுக்கு மேற்படி பரிசு வழங்கப்பட்டது.

நோபல் பரிசுக்கான குழுத்தலைவர் தேர்ப்ஜெர்ன் ஜாக்லாந்து கூறுகையில் பரிசை பெற்ற பெண்கள் மனிதஉரிமை, பெண்களுக்கு சமஉரிமை மற்றும் அமைதிக்கான தூதர்களாக விளங்குவதாக கூறினார். (அ-2)

## தாரிக்-இ-தலிபான் அமைப்பு பாகிஸ்தானுடன் பேச்சு

### அமெ.-பாக்.உறவில் விரிசல்

தாரிக்-இ-தலிபான் என்ற பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பு, பாகிஸ்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரி வித்துள்ளது.இது அமெரிக்க, பாகிஸ்தான் உறவில் மேலும்சிக்கலைஏற்படுத்தும்எனதெரிகிறது.

கடந்த 2007 இல் உருவாக்கப் பட்ட தாரிக்-இ-தலிபான் அல்லது பாகிஸ்தானின் தலிபான் பயங்கரவாத அமைப்பு பாகிஸ்தான் அரசுக்கு எதிராக போர் நடத்தப்படும் என அறிவித்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த அமைப்பின் துணைத்தளபதி மவுல்விபக்கீர் முகமது அளி த்த பேட்டியில், பஜாவுர் பழங்குடியினப் பகுதியில் வசிக்கும் தலிபான் கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இது வெற்றி பெற்றால் பிற பழங்குடியினப் பகுதி தலிபான்கள் பேச்சு நடத்த முன்வ ருவர் என தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சில் தெற்கு வசி ரிஸ்தான் பகுதியில் அமைதி நிலவ வேண்டும். சிறையில் உள்ள தலிபான்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கை கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (அ-2)

## பாக்.விமான தளத்திலிருந்து வெளியேறியது அமெரிக்கா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்ானில் ஷாம்சி விமான தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்காவின் 5 ஆளில்லா உளவு விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்கு மாற்றப்பட்டதாக ஜியோ தொலைக் காட்சி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள ஷாம்சி விமான தளத்தை பயங்கரவாதிகளுக்கு எதிராக போருக்கு அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. இந்நிலையில் நவம்பர் 26 ஆம் திகதி அமெரிக்க விமானங்கள்நடத்தியதாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 24 பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து ஷாம்சி விமான தளத்திலிருந்து டிசெம்பர் 11 ஆம் திகதிக்குள் வெளியேறிவிடுமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் தெரிவித்துவிட்டது.

இதையடுத்து அங்கிருந்து அமெரிக்க விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்கு மாற்றப்பட்டதாக வெள்ளிக்கிழமை செய்தி வெளியாகியுள்ளது. இந்த விமான நிலையத்தை பாகிஸ்தானிடமிருந்து குத்தகை பெற்றுள்ள ஐக்கிய அரபு அமீரகம் விமான நிலைய கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும் என்றும் அச் செய்தி தெரிவிக்கிறது. (அ-2)




அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற இருபது-20 கிரிக்கெட் போட்டியில் நாடாளுமன்ற அணி வெற்றியீட்டியுள்ளது. சபாநாயகர் கிண்ணத்திற்காக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சனத் ஜெயசூரியா தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் அணி வெற்றி யீட்டியுள்ளது. டொரிங்டன் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி 9 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப்பெற்றது. சுசில் பிரேம ஜெயந்த தலைமையிலான அமைச்சர்கள் அணி 7 விக்கெட் இழப்புக்கு 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இப் போட்டியில் எம்.பிக்கள் அணி சார்பில் சனத் ஜெயசூரிய 36 ஓட்டங்களைப் பெற்றார். அமைச்சர் விமல் வீரவன்ச 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# மே. தீவுகள்–இந்தியா மோதிய 5 ஆவது போட்டி; 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி

(சென்னை)

இந்தியா–மேற்கிந்தியதீவுகள் அணிகள் மோதிய 5–வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இப்போட்டியில் இந்திய அணியின் தலைவர் சேவாக், அஸ்வின், வினய்குமார் ஆகியோருக்கு ஒய்வு அளிக்கப்பட்டது. அவர்களுக்குப் பதிலாக ரகானே, இர்பான் பதான், மனோஜ் திவாரி ஆகியோர் இடம் பெற்றனர்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் காம்பீர் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

தொடக்கமே இந்திய அணிக்கு பலத்த அடியாக அமைந்தது. மேற்கிந்தியதீவுகள் அணியின் முதல்ஓவரைவீசிய ரோச்சின் 2வது பந்தில்ரகானே எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

தொடர்ந்து வீசிய 3வதுபந்தில்பார்த்தீவ்பட்டேல் விக்கெட்டைப்பறிகொடுத்தார். இருவரும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் ஓவரிலேயே 2 விக்கெட்டுக்களை இழந்து இந்தியா பரிதவித்தது. இதையடுத்து களமிறங்கிய திவாரி காம்பீருடன் இணைந்தார். இருவரும் மேற்கிந்தியதீவுகளின் பந்து வீச்சை பொறுமையாக கையாண்டனர். அவ்வப் போது பவுண்டரிகளும் அடித்தனர். காம்பீர் 31 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மார்ட்டீன் சுழலில் எல்.பீ.டபிள்யூ ஆனார். அதன் பிறகு திவாரியுடன் விராட் கோலி ஜோடி சேர்ந்தார்.

இவ்விருவரும் மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். திறமையாக விளையாடிய திவாரி ஒருநாள்போட்டியில் தனது முதல் அரைச்சதத்தை கடந்தார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய கோலியும் அரைச்சதத்தை கடந்தார். நரேன் வீசிய 38வது ஓவரின் 5வது பந்தை பவுண்டரிக்கு விரட்டியதன் மூலம் 103 ஓட்டங்களை கடந்து தனது முதல் சதத்தை பூர்த்தி செய்தார் திவாரி. சதம் அடித்ததும் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ரிட்டையர்டு கட் முறையில் அரங்கம் திரும்பினார். அவர் 126 பந்துகளை சந்தித்து 104 ஓட்டங்களை எடுத்தார். அதில்10பவுண்டரிகளும், ஒருசிக்ஸரும்அடங்கும்.

அவரைத் தொடர்ந்து ரோகித் சர்மா களமிறங்கினார் திறமையாக விளையாடிய கோலி 85 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்ட்டீன் வீசிய பந்தை பவுண்டரிக்கு விரட்ட முயன்று சாமுவேல்ஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து ரோகித் சர்மாவும் தனது பங்குக்கு 31 ஓட்டங்களை எடுத்து நரேன் பந்தில் விக்கெட்டைபறி கொடுத்தார். கடைசிப் பந்தில் 2 ஓட்டம் எடுக்க முயன்று மார்ட்டினால் ரன் அவுட் செய்யப்பட்டார் பதான். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் இந்திய அணி 267 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை இழந்தது. ரெய்னா 16 ஓட்டங்களை எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்கவில்லை. மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில் ரோச் மார்டின் 2 விக்கெட்டுக்களையும் நரேன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

268 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. முதல்பந்திலேயே சிமோன்ஸ் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்திய தீவுகள் 5.1 ஓவர் நிறைவில் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டக்களை இழந்தது நெருக்கடியிலிருந்தது. ஆனால் பொல்லார்ட் அதிரடி மேற்கிந்திய தீவுகளுக்கு நம்பிக்கையளித்தது. பொல்லாட் 110 பந்துகளில் 119 ஓட்டங்களை எடுத்து ஆறுதல் அளித்தார்.

ஆனால் மேற்கிந்தியதீவு அணி 44.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் இந்திய அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில்வெற்றி பெற்றது.

இதன் மூலம் இந்திய அணி தொடரை4:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

# நம்பியது நடந்தது –தோனி

சச்சினின் 200 ஓட்டங்கள் சாதனையை சேவாக் மட்டுமே முறியடிக்க முடியும் என எப்போதும் நம்பினேன் என இந்திய அணியின் தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

இந்தூரில் நடந்த நான்காவது போட்டியில் மேற்கிந்தியதீவுகள் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்து இரட்டைச் சதம் அடித்த சேவாக் ஒரு நாள் கிரிக் கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களை (219) எடுத்தவர் என்ற சாதனை படைத்தார். இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்தன. இந்திய அணியின் தலைவர் தோனி, சேவாக் சாதனை குறித்த கூறியதாவது,

குவாலியர் போட்டியில் சச்சின் இரட்டைச் சதம் அடித்து சாதித்தார். இதையடுத்து எல்லோரும் பல்வேறு வீரர்களை குறிப்பிட்டு அவர்களால் சச்சினின் சாதனையை தகர்க்க முடியும் என்று கூறிவந்தனர். ஆனால் நான் மட்டும் சேவாக்கினால் தான் இரட்டைச்சதம் அடிக்கமுடியும் என்று உறுதியாக நம்பினேன்.

இவர் பெரியளவில் அதிரடியான ஆட்டக்காரர் என்பதால்மட்டும் இப்படிநினைக்கவில்லை. சாதனை நிகழ்த்தும் துடுப்பாட்ட திறமை சேவாக்கிடம் இருந்தது என்பது தான் உண்மை.

# அவுஸ்.–நியூசிலாந்து 2ஆவது டெஸ்ட்; ஆஸிக்கு 241 ஓட்டங்கள் வெற்றி இலக்கு

நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட்கிரிக்கெட்போட்டியில்அவுஸ்ரேலிய அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 241ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா – நியூஸிலாந்து அணிகள் மோதும் 2டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது. இதன் முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்ற நிலையில் 2–வது டெஸ்ட் அவுஸ்திரேலியாவின் ஹோபார்டில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 45.5 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பின்னர் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 4.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 12 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

2வது நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடர்ந்து ஆடிய அந்த அணியில் வோர்ணர் 15, பொன்டிங் 5, கவாஜா 7, மைக்கல் ஹசி 8, ஹடின் 5, கிளார்க் 22 ஓட்டங்களுக்கு அடுத்தடுத்து ஆட்டமிழக்க 7 விக்கெட் இழப்பிற்கு 85 ஓட்டங்கள் என்ற பரிதாபநிலைக்கு தள்ளப்பட்டது அவுஸ்திரேலியா. இதையடுத்து ஜோடி சேர்ந்த சிடிலும் பட்டின்சனும் அணியை சரிவிலிருந்து மீட்க போராடினர்.

நிதானமாக விளையாடிய பீட்டர் சிடில் 58 பந்துகளில் 3 பவுண்டரிகள் உடன் 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

சிடில்–பட்டின்சன் ஜோடி 8வது விக்கெட்டுக்கு 56 ஓட்டங்களை சேர்த்ததால் அந்த அணி மோசமான நிலையில் இருந்து மீண்டது. பட்டின்சன் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கடைசி விக்கெட்டாக ஸ்டார்க் 4ஓட்டங்களுடன் வெளியேற அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் 136 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. நியூஸிலாந்து தரப்பில் கிறிஸ் மார்ட்டின், பெல்ட், பிரஸ்வெல் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் 14 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நியூஸிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடியது. மக்கலம் 12 ஓட்டங்களிலும் குப்டில், ஜெஸ்ஸி ரைடர் ஆகியோர் தலா 16 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ஜோடிசேர்ந்த அணித்தலைவர் ரோஸ் ரெயிலரும் வில்லியம்ஸனும் நிதானமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தனர். இந்த அணி 2வது ஆட்ட நேரமுடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அவுஸ்திரேலியத் தரப்பில் பட்டின்சன், சிடில், மைக்கல் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். மூன்றாவது நாள் ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந் நிலையில் நேற்று தனது 2வது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலியா அணி நேற்றைய ஆட்டநேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 72 ஓட்டங்களைப் பெற்று இருந்தது.

அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு 10 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் இன்னும் 169 ஓட்டங்கள் மாத்திரம் தேவைப்படுகின்றன. இன்று திங்கட்கிழமை போட்டியின் 4வது நாளாகும்.

# கூட்டமைப்பின் நிபந்தனைகள் ஈழக் கோரிக்கைக்கு நிகரானது

## திவயின ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழக்கோரிக்கைகளுக்கு நிகரான வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர் என்று திவயின ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாட்டின் அனைத்து மக்களுக்கும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்திய ஈழ வாதத்தை எந்த வகையிலும் மீளத் தலை தூக்க விடக்கூடாது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்களைச் சேர்ந்த மக்களின் கலாசாரத்தையும் சமயத்தையும் இல்லாதொழித்த பிரபாகரனின் ஆவிகள் இன்னும் நாட்டில் உலாவுகின்றன.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

எனினும் அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த காரணத்தினாலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அச்சமின்றி அரசியல் செய்யக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் தங்களது பங்களிப்பு முக்கியமானது என்பதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நன்கு உணர்வார்கள். எனினும், அவர்களது அரசியல் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் அமையவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் முன்வைத்த வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட்ட மூன்று நிபந்தனைகளும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது. ஈழக் கோரிக்கைகளுக்கு நிகரான வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இந்த நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர்.

வடக்கையும் தெற்கையும் இணைக்கக்கூடிய வகையிலான யோசனைத் திட்டங்களுக்கு பதிலாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தொடர்ந்தும் பிரிவினை வாதத்தை தூண்டும் நிபந்தனைகளை விதிக்கின்றனர்.

தமிழ்- சிங்கள மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்பவில்லையா? என திவயின ஆசிரியர் தலையங்கத்தில கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவது தொடர்பில் அரசாங்கத்தை போன்றே தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் உண்மையான ஆர்வம் இருக்கவேண்டும் என்று திவயின ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

---

### அத்தியாவ...

தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்காக ரூபாயின் பெறுமதியை 3 சதவீதத்தால் கடந்த மாதம் அரசாங்கம் குறைத்தது.

ரூபாயின் பெறுமதியானது குறைவடைந்துவிட்டது. ஆகவே பொருட்களை இறக்குமதி செய்யும் போது விலையானது அதிகமாக காணப்படுகின்றது. இதனால் பொருட்களின் விலை அதிகமாகலாம். ஆனால் பொருட்களின் தட்டுப்பாடு இங்கு காணப்படவில்லை.

அத்தியாவசியப் பொருட்கள் எனும்போது அரிசி, சீனி, மா, கடலை, பயறு போன்ற பொருட்கள் இந்த வாரம் களஞ்சிய இருப்பில் காணப்படுகின்றன.

இதுவரைக்கும் நுகர்வோர் அதிகாரசபையோடு தொடர்பு கொள்ளவில்லை.

தாக்கம் எதாவது ஏற்படும் பட்சத்தில் தொடர்புகளை ஏற்படுத்துவோம்.

இப்பொழுது பொருட் தட்டுப்பாடு எதுவும் காணப்படவில்லை. கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் பொருட் தட்டுப்பாடு காணப்பட்டது. அதனை அரசாங்கம் தான் தீர்த்துவைத்தது.

இந்த மாதத்தை பொறுத்தவரை எந்தவித பிரச்சினையும் காணப்படவில்லை. அடுத்த மாதம் அளவில் விலையை அதிகரிக்கலாம் என தீர்மானித்துள்ளோம்.

வரி தொடர்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அரசுடன் பேச வேண்டியுள்ளது.

அரசு இது தொடர்பாக பிரச்சினை வந்தால் மட்டுமே பேச முனைகிறது என்றார். (எ-11)

---

### மனித உரிமை...

போன்றவற்றின் மூலமே நாடடின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதே ஜே.வி.பியின் நம்பிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாளித்துவ கொள்கையை பின்பற்றும் நாடுகளில் மக்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லையென அவர் தெரிவித்துள்ளார். மக்கள் உரிமைகளை நசுக்கும் அரசாங்கங்களை வெளியேற்றுவதற்கு உலக மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டிய காலம் மலர்ந்துள்ளது என் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

---

### அனோமா...

யிடம் பொதுமன்னிப்புக் கோரவுள்ளதாக இத் தொலைபேசி அழைப்புக்கு பதிலளித்த அலரிமாளிகையின் தொலைபேசி இயக்குநர் கருதியுள்ளார்.

இதனையடுத்து அனோமா பொன்சேகா தொலைபேசி இணைப்பில் இருப்பதாகவும் உங்களிடம் பேச வேண்டும் என்று கேட்பதாகவும் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

இத்தொலைபேசி அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அப் பெண் தன்னுடன் பேச விரும்பியமைக்கான காரணம் குறித்துக் கேட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தயவுடன் குறிப்பிட்ட அப்பெண், ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என கேள்வி எழுப்பியதுடன், தங்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் தன்னை சுதாகரித்துக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நீங்கள் யார்? எனக் கேட்டபோது, நான் அனோமா எனப் பதிலளித்துவிட்டு அப்பெண் சத்தமாக சிரிக்க ஆரம்பித்துள்ளார்.

இப் பெண் தன்னை ஏமாற்றுவதாகக் கருத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எனக்கு அனோமாவைத் தெரியும். உங்களைப் போல் அவர் ஒரு வாயாடிப் பெண் அல்ல. நீங்கள் அனோமாவாக இருந்தால் உங்களின் கணவன் சிறையில் இருக்கும்போது சிரிக்கிறீர்களே எனக் கூறிவிட்டு, கோபத்துடன் தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக் கொண்டார்.

இத்தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட பெண் குறித்த விசாரணைகளின் போது, அவர் ஒரு மனநலம் குன்றிய பெண் எனத் தெரியவந்துள்ளதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (ஏ)

---

### கீரிமலை...

சேர்ந்த தயாகரன் கீர்த்தனன் (வயது 19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3,37)

# கிழக்கின் தலைநகரம் மட்டக்களப்புத்தான்

## அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என 3 மாவட்டங்களை கொண்டிருந்தாலும் மட்டக்களப்புதான் மையப் பகுதியாகக் காணப்படுகின்றது. எனவே மட்டக்களப்புதான் கிழக்கு மாகாணத்தின் தலைநகர் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா கூறினார்.

மாகாணத்தின் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தான் மட்டக்களப்பில் இருந்த பல தலைமைக் காரியாலங்கள் திருகோணமலைக்கு மாற்றப்பட்டன. ஆனால் இன்று கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களை விட ஓர் அழகானதும் சமாதானமானதுமான ஓர் மாகாணமாகக் காணப்படுகின்றது.

எனவே இந்த சூழ்நிலையிலே கிழக்கு மாகாணத்திற்கு மட்டக்களப்புத்தான் தலைநகராக அமையும். எனவே எதிர்காலத்தில் பெரும்பாலான தலைமைக் காரியாலயங்களை மட்டக்களப்புக்கு மாற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் கருணைநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்வே, கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (எ-11)

## ஒன்றரை ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிர் செய்கை

(கொழும்பு)

ஆயித்தியமலை - திக்குந்த பிரதேசத்தில் கஞ்சா பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் இருவரை ஆயித்தியமலைப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 66 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இருவரால் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட கஞ்சா பயிரை ஆயித்தியமலை சாஸ்திரவெலி முகாம் விசேட அதிரடிப்படையினர் அழித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் ஆயித்தியமலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

---

### இலங்கை...

விரிவாக ஆராயவுள்ள இவர், இதன்போது இலங்கையின் அரசியல் போக்குகள் குறித்தும் ஆராய்வர் என கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. (எ-11)


**வரலாறு - A/L R.R. ஆனந்தன்**

| DCM கல்வி நிறுவனம் வேம்படி மகளிர் கல்லூரி அருகில் யாழ். நகர். | | புதிய பொருளியல் கல்லூரி மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயில் அருகில் | |
|---|---|---|---|
| 2012 - திங்கள் | -10.00 | 2012 - செவ்வாய் | - 11:00 |
| செவ்வாய் | - 9.00 | வெள்ளி | - 8.00 |
| சனி, ஞாயிறு | - 9.00 | சனி, ஞாயிறு | -12.00 |
| 2013 - செவ்வாய் | - 8.00 | 2013 - திங்கள் | - 8.00 |
| | | செவ்வாய் | -10.00 |
| | | சனி, ஞாயிறு | - 8.00 |

குறிப்பு: 2012 - இலங்கை வரலாற்றில் பகுதி I வினாவிடை வகுப்பானது 40/40 சரி எடுப்போம் என்ற தலைப்பில் இடம்பெறுகின்றது.
(6954)

புதிய
**பொருளியல் கல்லூரி**
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர் (பெருமாள் கோவிலுக்கு அருகாமை)
A/L 2012 2013
விடுமுறை கால வகுப்புக்கள்
**கலை, வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம்:- 12.12.2011 திங்கள் காலை 8.00 மணி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(C-5174)

**கிருஷ்ணா அடகு சேவை**
இல.370, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்.
பதிவு இல:- J/DS/BR/472
மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி (31.10.2010) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2012) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக் கொள்ளவும் அல்லது ஒரு பகுதிப்பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.01.2012 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 5046 -உரிமையாளர்

MOBILE NET MCS COMPUTER SERVICES
324, Palaly Road, Jaffna
O/L, A/L
BIT
*ICT *GIT FIT

பதிவுகள் 14th Dec 2011க்கு முன்னர் நேரில்
முதல் 20 மாணவர்கட்கு மட்டுமே அனுமதி
*90% Discount
Qualified Lectures panel
Passing Guarantee
12 Years Experience
Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Scholorship
Supported by UNDP/JRRP


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.